| 2ம் | இடம் | - | S. அர்ஜுன்குமார் | 8R |
| 3ம் | இடம் | - | K. பகீரதன் | 8Q |

கீழ்ப்பிரிவு :-

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | E. பிரகலாதன் | 10R |
| 2ம் | இடம் | - | N. பிரவின் | 10R |

கீழ்ப்பிரிவு :-

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | P. கோகுலபிரதீப் | 11R |
| 2ம் | இடம் | - | N. சன்ஜீவ் | 11Q |
| 3ம் | இடம் | - | S. ராகவேந்தன் | 11Q |



## ஆரம்பப்பிரிவு

## 5 J

### சமய அறிவுப்போட்டி

1. சோ.சியாம் சந்தோஷ்
2. இ. கிருசிகன்
3. ப.கைலாஷ்

### பேச்சுப்போட்டி

1. சோ.சியாம் சந்தோஷ்
2. க. திவ்யன்
3. ப.கைலாஷ்
3. க.ரஜீவன்

### சகலகலாவல்லிமாலை

1. ப.கைலாஷ்
2. சோ.சியாம் சந்தோஷ்
3. இ. கிருசிகன்
4. க. திவ்யன்

## 5 H

### சமய அறிவுப்போட்டி

1. த.மயூரன்
2. மு.மயூரன்
3. சு.வித்தியாகர்

### பேச்சுப்போட்டி

1. த.மயூரன்
2. மு.மயூரன்
3. ம.வசீகரன்
3. இ.துவாரகன்

### சகலகலாவல்லிமாலை

1. த.மயூரன்
2. சு.சவீஷ்காந்
3. சு.சவீஷ்நாத்

ஆரம்பப்பிரிவு

## 4 J

### பூமாலைகட்டல்

1. அ.க.பாலரட்ணராஜா
2. கி.விபுதேஸ்
3. நா.செந்தூரன்
3. அபிஷேக்

### சகலகலாவல்லிமாலை

1. அ.க.பாலரட்ணராஜா
2. ப.வாஸ்வதன்
3. கு. சுலக்ஷன்
4. சி.விபுதேஸ்

### சமய அறிவுப்போட்டி

1. சி.விபுதேஸ்
1. அ.க.பாலரட்ணராஜா
3. கு. சுலக்ஷன்

## 4 H

### பூமாலை கட்டுதல்

1. ஜோ.திலக்ஷன்
2. ச.மிதுஷன்
3. கு.அஜன்தியா
3. கி.ஜனகன்

### சகலகலாவல்லிமாலை

1. கு.அஜன்தியா
2. து.துவாரகன்
3. கி.ஜனகன்
3. ஜெ.நிதர்சன்

### வினாவிடை

1. த.ரிசிகேசன்
2. ல.கவிசன்
3. கி.ஜனகன்

## அர்த்தமுள்ள இந்து மதம்.

இந்துமதம் பிறமதங்களை வெறுப்பதில்லை. சொல்லப்போனால் எல்லா மதங்களையும் தன்னோடு சமமாகவே கருதுகிறது.

மதத்துவேஷம் எந்தக் காலத்திலும் இந்துக்களால் ஆரம்பிக்கப்பட்டதில்லை.

அதன் பரந்த கரங்கள் அத்தனை மதங்களையும் அணைத்துக்கொண்டே வளர்ந்திருக்கின்றன.

ஓர் ஏரியின் நீரைப்போல் பரம்பொருளையும் அதில் இறங்குகின்ற பல படித்துறைகளைப்போல் எல்லா மதங்களையும் பரமஹம்சர் கூறுகின்றார்.

அன்பின்மூலம் ' அன்பு வளர்வதைப்போல், வெறுப்பின்மூலம் வளர்வதில்லை என்கிறது இந்து மதம்.

வெறுப்பு ஒரு குறுகிய கூட்டுக்குள் சதிராடுகிறது.

அன்போ, வானையும் கடலையும் போல், அறிவுரை விரியச்செய்கிறது.

நிலத்தைப் பங்குபோட்டுக் கொள்வதுபோல் வானத்தைப் பங்குபோட முடிவதில்லை.

“நிலம்” என்பது மதம் ; “வானம்” என்பது பரம்பொருள் என்கிறார் பரமஹம்சர்.

“சமணமதம் பரவிக்கிடந்த காலத்தில் அதைக் கருவறுத்து, சமணர்களைக் கழுவிலேற்றிய கூன் பாண்டியனும், மங்கையர்கரசியும் தான் பிற மதங்களைத் துவேஷித்த முதலாவதும் கடைசியுமான இந்துக்கள்”

அவர்களுக்கு முன்னாலும் சரி, பின்னாலும் சரி, இந்துமதம் யாரையும் வெறுத்ததில்லை.

வீட்டின் உச்சி முகட்டுக்குப்போக ஏணி, மூங்கில் படி, கயிறு - இவற்றில் ஏதேனும் ஒன்றை உதவியைக் கொண்டு ஏறலாம். அது போலப் பரம்பொருளை அடைவதற்கு வேறு வேறு மார்க்கங்கள் உண்டு. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட மார்க்கங்களில் ஒன்றைத்தான் காட்டுகின்றது.

மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ, பிரகாசமாகவோ வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகத் தோன்றுமாயினும், மின்சாரம் ஒரே இடத்திலிருந்து தான் வருகிறது.

அதுபோலவே, “வெவ்வேறு காலத்தில் தேசந்தோறும் தோன்றிய மத போதகர்கள் அனைவரும் சர்வசக்தியுள்ள ஒரேயொரு மூலப்பொருளிடமிருந்து இடைவிடாது பெருகிக் கொண்டிருக்கும் ஒளியை வெளியிடும் தீப ஸ்தம்பம் போன்றவர்களே” என்கிறார் பரமஹம்சர்.

எல்லா மதங்களாலும் போற்றப்படும் இறைவன் ஒருவனாகவே இருந்தால் ஏன் அவனைப் பல மதங்களும் பலமாதிரி வருணிக்கின்றன?

இங்கு பரமஹம்சரின் பதில்:-

நீ வீட்டு எஜமான், உன் மனைவிக்கு கணவன், மகனுக்குத் தந்தை, வேலைக்காரர்களுக்கு முதலாளி, ஆனாலும் நீ ஒருவன் தான்.
அவரவரும் உன்னிடம் கொண்ட உறவு முறையை வைத்து உன்னைப் பார்ப்பது போல், பல மதத்தவரும் ஆண்டவனைப் பல விதத்தில் பார்க்கின்றார்கள்.

ராமகிருஷ்ணரின் இந்த வாக்கு இந்துவின் விரிந்த ஞானத்திற்கு எடுத்துக்காட்டு.

இந்துமதத்திற்கு எதிராகப் பல கட்டங்களில் தோன்றிய நாத்திகவாதம், தானாகவே மடிந்து போனதற்கும் காரணம் இதுதான்.

சகிப்புத் தன்மையையும், அரவணைப்பையும் இந்து மதம் வலியுறுத்துகிறது.

"உடலில் பட்ட காயம் மறைந்துவிடும். உள்ளத்தில் பட்டால் மறையாது. ஆகவே பிறரை நீ புண்படுத்தாதே." என்கிறது இந்துமதம்.

தண்டனையைக் கடவுளின் பொறுப்பில் விட்டு விடுவதால் நடைமுறைகளைத் தாங்கிக் கொள்கிற சக்தி இயற்கையாகவே வந்துவிடுகிறது.

"காலப்போக்கில் ஒவ்வொன்றும் மாறுகிறது." என்ற விஞ்ஞான உண்மையை வேதாந்த உண்மையாக இந்துக்கள் எப்போதோ சொல்லிவிட்டார்கள்.

"மாறும்வரை பொறுத்திரு" என்பதே இந்து மதத்தின் உபதேசம்.

மனப்பக்குவம் இல்லாதவன் நினைத்தபடி எல்லாம் நடக்கின்றான்.

வழியில் கிடக்கும் அனுபவங்கள், அவனுக்கு அந்தப் பக்குவத்தை உண்டாக்கி விடுகின்றன.

வெறுப்பை வளர்ப்பவனும் என்றோ ஒருநாள் பக்குவம் பெறுவான் ; அதுவரை அவனை நாம் சகிப்போம்.

**M.Noel**
**11 R**



# அஷ்ட ஐஸ்வர்யங்களை அருளும் திருமகள்

கஜேந்திர மோட்சக் கதை ஒன்று உண்டு. கஜேந்திரன் எனும் யானை பகவானைப் பூஜிக்க மலர்பறிக்கச்சென்ற இடத்தில், ஆற்று நீரில் முதளை வாயில் அகப்பட்டபோது, "ஆதி மூலமே காப்பாற்று" எனப் பிளறியது. "ஆதிமூலமே" என யானை அழைத்தது யாரை? பிரம்மா நான் இல்லை என்றார். சிலபெருமானும் திகைத்துநின்றார். நாராயணனோ ஆதிமூலம் என கஜேந்திரன் அழைத்தது யாராக இருக்கும் என யோசித்தார் மும்மூர்த்திகளும் இப்படி யோசிக்க, திருமாலின் கையிலிருந்த சக்கரம் சுழல ஆரம்பித்தது. விண்ணில் சுழன்று, மண்ணில் இறங்கி முதலை வாயிலிருந்து யானையைக் காப்பாற்றியது.

கஜேந்திர மோட்சத்தை அளித்த அச்சக்கரமே ஸ்ரீ சக்கரமாகும். "ஸ்ரீ" என்பது சாட்சாத் மகாலட்சுமியைக் குறிக்கும். ஸ்ரீ என்பதைத் தூய தமிழில் "திரு" என்போம் திருமகளை மார்பில் உடையவன் என்பதைத்தான் பெருமானைத் திருமால் எனும் பெயரால் விளக்கியுள்ளனர்.


அழகும், பிரகாசமும் கொண்ட திருமகளை பகவனாகிய ஸ்ரீமத் - நாராயணனே வைகுண்டத்தில் வைத்துப் பூஜிப்பதாகச் சொல்வார். எல்லோரும் விரும்பும் பொன், பொருளை மட்டுமல்ல அஷ்ட ஐஸ்வரியங்களுக்கும் ஆதரமான வீரமும், விவேகமும் எல்லாவற்றிலும் ஜெயமும் தரவல்லவள் திருமகள் ஆதலால் விஜயலட்சுமியாகப் போற்றப்படுகிறாள்.

நவராத்திரி நாட்களில் புரட்டாதி, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய திதி நாட்கள் விஜயலட்சுமிக்கு உகந்த நாட்களாகும். இம் மங்கள நாட்களில் செந்தாமரை, செவ்வரலி, ரோஜா, செண்பகப் பூ, செம்பருத்தி, கதம்பம் ஆகியவைகளால் லட்சுமியைப் பூஜிக்கலாம். இந்த நாட்களில் தேவிக்கு சர்க்கரைப் பொங்கல், கற்கண்டு, சாதம், பாயசம், பஞ்சாமிர்தம் போன்றவற்றை நிவேதனமாகப் படைத்து அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரங்கள் சொல்லி வழிபடலாம்.

**அ. செந்தூரன்**
**தரம் 8 Q**



*With the best compliment From*



# Ashwin Ganesh Balaratnarajah



**STUDENT**

**4 J**

பாடசாலைக்குள்ளான கவிதை போட்டியில் மேற்பிரிவில்
முதலிடம் பெற்ற கவிதை

## சமாதானமே உன்விலை என்ன?

பொன்னான தமிழன்னை மொழியை தந்தனன்
பெற்ற உயிரன்னை உயிரை தந்தனன்
அழகிய இயற்கையன்னை அழகை தந்தனன்
யுத்தங்களுக்கு பதில் யார் தந்தவர்?

அன்னைக்கு இணையான உயிர் இல்லை
நம் பண்புக்கு இனையாக ஏதுமில்லை
நம் நாட்டிற்கு ஒத்த தாயில்லை
அதை காப்பதில் பார்க்க கடமை ஏதுமில்லை.

மனித உயிரை துச்சமெனும் அரக்கன்
மக்கள் பசிப்பிணியை உருவாக்கும் அரசன்
அன்பை அடைக்குத்தாழ் யாசுரனின்
அது கொடூர உயிரான அரக்க யுத்தம் தானே

அழகிய பல கொடைகள் அவற்றை
அழுகிய மலராக மாற்றியது யுத்தம்
அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் இதை
பொய்யாக மாற்றியது யுத்தமேதான்

யுத்த அரக்கன் மனித உயிர்களிடம்
கேட்ட கேள்வி உன் உயிரின் விலை என்ன?
அன்பென்ற இமயத்தை கொடூரமான குறுகிய
யுத்த குன்று கேட்டது உன் விலை என்ன?

அன்பிலே நாம் முரசு கொட்டுவோம்
பண்பினால் உயர நல் முரசு கொட்டுவோம்
இவ்வாறு பல முரசுகொட்டி சென்ற
வீரதமிழனின் வாக்கை இல்லாதொழித்தது யுத்தம்

பஞ்சு போன்ற மென்மனதை துளைத்தது
இந்த யுத்தம் மக்களின் உதிரத்தை
வீரமாய் குடித்ததிந்த யுத்தம் வேண்டாம்
இவ்யுத்த வரக்கனை வீழ்த்துவோம்!

யுத்தமெனும் அரக்கனை இனி நாம்
வீழ்த்துவோம் வீழ்த்தி இனி நாம்
கேட்போம் உன் விலை என்ன?
சிறு புல்லு கேட்கட்டும் யுத்தவரக்கனை உன் விலை என்னவென?

**சிறீரமணன்**
**11Q**

# கடவுள்

காலங்களையும் கையில் அடக்கியவர்
காற்றையும் கனத்தில் நிறத்துபவர்
எம் விதியையும் திர்மானித்திடுவார்
எமக்கு ஏற்படும் சதியையும்
ஒழித்திடுவார் - எல்லா
செயலையும் செய்வார்
எல்லோர் மனதிலும் நுழைவார்.

பரந்த மனதை உடையவர்
பரம்பொருள் ஆனவர்
எம் மூச்சிலும் உள்ளார்.
எம் பேச்சிலும் உள்ளார்!

எம்மைக் கடந்து நின்றும்
எமக்குள்ளே நின்றும் - எம்மை
அன்போடு பாதுகாத்திடுவார்
மலைச்சிகரங்களையும் மறைத்திடுவார்
ஓயா அலைகளையும் மறைத்திடுவார்

போற்றினால் தினமும் அவரை
காப்பாற்றுவார் தினமும் எம்மை
பாலும் பழமும் உண்டு
பக்தியுடன் அவரை கண்டு
பெரும் மகிழ்ச்சி கொண்டு
செய்கிறார்கள் பலர் தொண்டு!

பாவங்கள் செய்பவர்களை
பார்க்காமலே விட்டு விடுவார்
பால்மனம் படைத்தவர்களுக்கு
பார் அளவில் அனைத்தையும்
வழங்கிடுவார் ரோஜாவிற்கு
பாதுகாப்பளிப்பது அதன் முள்
அந்த முள்ளிற்கே பாதுகாப்பு
கொடுப்பது அவர் தான்!

அவரை மெய்யன்போடு
வணங்கினால் - பக்கவாதத்தையும்
பக்கம் பக்கமாக நொருக்கிடுவார்
வெந்நீரையும் பன்னீராக்கிவிடுவார்
மண்ணையும் பொன்னாக்கி விடுவார்
கடலையும் கல்லாக்கிவிடுவார்!

உலகம் என்னும் நான்கெழுத்துக்கு
பாதுகாப்பு கொடுக்கும்
கடவுள் என்னும் நான்கெழுத்து
ஒலித்தாலே - வெயிலும் குளிரும்!
மழையும் சுடும்! அரை நொடியில்
யுத்த நாட்டிற்கு அடிமையாவோமா?
கால் நொடியில் கடவுளை
அடைவோமா?
சிந்தியுங்கள்.....

**S. Ladurshan**
**8 R**

---

## இயற்கையில் இறைவன்

இறைவன் என்பது வேறேதும் அல்ல
இயற்கைதான்
இயற்கையை மாசுபடுத்தாதீர் அது
இறைவனை மாசுபடுத்துவதற்குச் சமன்

குயிலின் இன்னிசை கானமே
இறைவனின் நாதம்
மயிலின் மழைபெய்யும் சந்தோஷ நடனமே
இறைவனின் ஆனந்தக்கூத்து

இனிய மெல்லிய காற்றின் வருடலே
இறைவனின் ஸ்பரிசம்
கடலின் ஓ என்ற ஓசையே
இறைவனின் பேசும் மொழி

கரடுமுரடான நிலமே உண்மையான
இறைவனின் திருமேனி
இதில் வளர்ந்த அடர்ந்த மரங்களே
இறைவனின் மயிர்கள்

எங்கும் எதிலும் இறைவனைக்
காணலாம்
இயற்கையை தெய்வமாக
மதிக்கும் போது

**கி. பிரபஞ்சன்**
**8 R**


## பொதுக் குறிப்புக்கள்

**பிரார்த்தனை :**
இறைவனிடம் விண்ணப்பம் செய்தல் பிரார்த்தனை எனப்படும்.

**ஜபம் :**
இறைவனிடம் திருநாமத்தை தொடர்ந்து திரும்பத் திரும்ப உச்சரித்தல் ஜபம் எனப்படும்.

**நைவேத்தியம் :**
இறைவனின் திருவுருவிற்குரிய உணவு நைவேத்தியம் எனப்படும்.

**சீராக்கம் :**
தூய்மை செய்யப்பட்ட பூஜைக்குரிய நீர் எனப்படும்.



**பக்தி :**
இறைவனிடம் கொள்ளும் அன்பு பக்தி எனப்படும்.

கி. பிரபஞ்சன்
8 R

## வீட்டின் திசைகளும் அமைப்பும்

**கிழக்குத்திசை, வடகிழக்குப் பகுதி**
கிணறு, பூஜைஅறை, வரவேற்புஅறை, தண்ணீர்த்தொட்டி

**கிழக்குத்திசை, தென்கிழக்குப் பகுதி**
உணவருந்தும் அறை, சமையலறை, குளியலறை, கழிவறை

**தெற்குத்திசை, தென்கிழக்குப் பகுதி**
வரவேற்பு அறை, படுக்கை அறை, மாடிப்படிகள்


**தெற்குத்திசை, தென்மேற்குப் பகுதி**
படுக்கை அறை, அலுவலகம்

**மேற்குத்திசை, தென்மேற்குப் பகுதி**
தண்ணீர்த்தொட்டி, பொருள் வைக்கம் அறை, குளியலறை

**மேற்குத்திசை, வடமேற்குப் பகுதி**
படுக்கைஅறை, மாட்டுத்தொழுவம், தண்ணீர்த்தொட்டி

**வடக்குத்திசை, வடமேற்குப் பகுதி**
வரவேற்பறை, படிக்கும் அறை

**வடக்குத்திசை, கிழக்குப் பகுதி**
பூஜை அறை, கிணறு



பாடசாலைக்குள்ளான போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற "சிறுகதை"

## தாயிற் சிறந்த கோயிலுமில்லை

இயற்கை அழகின் சொர்க்கம் என்னு கூறப்போனால் அது வர்ணபுரி ஊர் ஆகும். அந்த ஊரின் மத்தியில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. பல பறவைகளின் இல்லமாக இந்த மரம் அமைந்துள்ளது. பறவைகளின் இனிய ஒலி அந்த ஆலமரத்தை இன்ப மரமாக மாற்றியது. அந்த ஆலமரத்தின் கீழ் எப்பொழுதும் காலையில் இரண்டு பாவமறியாத நெஞ்சங்கள் பேசிக்கொண்டிருக்கும்.(சிறுவர்) அந்தச் சிறுவர்கள் தான் ஆறாந்தரத்தில் பயிலும் கபிலனும், மோகனும் ஆகிய இணை பிரியாத நண்பர்கள் ஆகும். இவர்கள் இருவரும் ஆலமரத்துக்கு அண்மையிலுள்ள பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். நித்தமும் இவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னே அந்த ஆலமரத்தின் கீழ் உரையாடிவிட்டுத்தான் செல்வர். அந்த ஆலமரத்தின் வளர்ச்சி போல் இவர்களது நட்பின் வளர்ச்சி இருந்தது.

கபிலன் சிறுவயதிலேயே தந்தையை இழந்தான். கபிலனுக்கு அவனது தாயின் சொல்லே வேதவாக்கு ஆகும். மோகன் அவனது வீட்டில் ஒரு செல்லப்பிள்ளை ஆவான். மோகனது தந்தை வெளிநாட்டில் வேலை செய்பவர் ஆவார். மோகனது தாய் மோகன் மேல் உயிரையே வைத்திருப்பவர். ஆனால் மோகன் தனது தாயின் சொல்லை அவ்வளவாக மதிப்பதில்லை. மோகனது தாயும் சிறுபிள்ளை தானே என்று விட்டுவிடுவார். கபிலனும் மோகனும் கல்வியில் சிறந்து விளங்கினர்.

காலங்கள் உருண்டோடின. பிஞ்சு நெஞ்சு பாவமறியாது. இது உண்மை தான். கபிலனும் மோகனும் ஒன்பதாந் தரத்தில் கல்விபயின்று கொண்டிருந்தனர். மோகனுக்கு அவனது பணத்தினால் தீ நட்பு வந்தது. இதை கபிலன் அறிந்தான். என்றாலும் "மோகன் தீ வழியில் செல்லமாட்டான்."
என்று கபிலன் நினைத்தான். தீயதிற்கு நல்லதைக் கண்டால் வெறுப்பு வரும்.அதுபோல் மோகனின் தீய நண்பர்களுக்கு கபிலனைப் பிடிக்கவில்லை. அதனால் அந்த நண்பர்களில் அனுஜன் என்றொருவன் "மோகன் நீ ரொம்ப அப்பாவி. உன்னை அழிக்கவும் உனது பணத்திற்காக வந்தவனுமாகிய கபிலனிடம் நட்பைப் பாராட்டுகிறாய். இதிலிருந்து உனது அப்பாவித்தனம் எனக்குப் புரிகிறது." என்று மோகனிடம் கூறினான். அதற்கு மோகன் "அவன் ஒன்றும் அப்படிப்பட்டவன் இல்லை" என்றான். பின்னர் அனுஜன் தன்னால் முடிந்தவரை மோகனுடன் கதைத்தான். "கரையக் கரையக் கல்லும் கரையும்" என்பது போல் மோகனது மனமும் மாறியது. கபிலனினதும் மோகனினதும் நட்புச்சங்கிலி முறிந்தது.

கபிலனுக்கு "மோகன் தன்னை விட்டுப் பிரிகிறான்" என்று விளங்கியது. அவன் தனது தாயிடம் அதைப்பற்றிக் கூறினான். அதற்கு அவனது தாய் "கபிலன் நீ வருந்தாதே. எதற்கும் நான் மோகனின் தாயுடன் கதைத்துக் கொள்கிறான். அதுவரை நீ கபிலனுடன் உறவாடாதே. அவனது நண்பர்கள் மூலம் உனக்கு ஆபத்து நேரிடலாம்" என்று கூறினார். அவனும் தனது தாயின் சொற்படி நடந்தான்.

கபிலனது தாய் மோகனது தாய்க்கு நடந்த விடயத்தைத் தெரியப்படுத்தினார். இதனை அறிந்ததும் மோகனது தாய் கவலை அடைந்தார். மோகனது தாய் " நான்

பார்த்துக் கொள்கிறேன்'' என கபிலனது தாய்க்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார். கபிலனது தாயும் மன ஆறுதலுடன் தனது வீட்டுக்குச் சென்றார். மோகன் வீட்டிற்கு வந்ததும் அவனது தாய் கபிலனுக்கு நடந்தவற்றைக் கூறினார். கபிலன் ''அம்மா நீங்கள் நினைப்பது போல் கபிலன் நல்லவனில்லை'' என்று கூறினான். மோகனது தாய் ''பொய் சொல்லாதே உன் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுவதை நானும் அவதானித்திருக்கிறேன்'' என்றார். அதற்கு மோகன் ''நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்பதாக இல்லை'' என்று கூறிவிட்டு கோபமாக தனது அறைக்குச் சென்றான். மோகனது தாயின் முயற்சி ''செவிடன் காதில் ஊதிய சங்கு'' போல் ஆனது.

காலங்கள் வேகமாக உருண்டோடின. கபிலனும், மோகனும் மீண்டும் ஒன்றாகச் சேரவில்லை. இவர்கள் தற்போது க.பொ.த உயர்தரப் பரீட்சை செய்ய தயாராகின்றன. உயர்தரப்பரீட்சைக்கு இரண்டு கிழமைகள் மாத்திரமே இருந்தன. அதற்குள் மோகன் பாடசாலையில் ஒரு மாணவனுடன் தகராற்றை ஏற்படுத்தினான். அந்தப் பிரச்சினை அதிபர் அறை வரை சென்றது. அதிபர் மோகனது தாயை அழைத்து மோகனுக்கு எச்சரிக்கை செய்தார். இச் சம்பவம் மூலம் மோகனது தாய் மிகவும் கவலை அடைந்தார். மோகன் அச்சம்பவம் மூலம் மனவருத்தமடையவில்லை.


க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிந்து பெறுபேறுகளும் கிடைத்தன. அதில் கபிலன் உயர் சித்தி பெற்றான். மோகனால் பரீட்சையில் தேறமுடியவில்லை. அந்தப்பாடசாலையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்காக விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கபிலன் மேடையில் பேசினான். கபிலன் ''நான் பாடசாலையிலே உயர்சித்தி பெற்றதற்கு காரணம் எனது தாய் ஆவார். எனது அன்னை என் கல்விக்காக பட்ட இன்னல்கள் இன்னும் என் மனக்கண்ணில் நிற்கிறது. ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்பது என் வாழ்வில் உண்மை'' என்று கூறினான். இதனை மோகனும் கேட்டான். அவனுக்கும் அவனது தாயின் கஷ்டங்கள் மனக்கண்முன்னே தோன்றன. உடனே அவன் கபிலனது தாயின் கால்களில் விழுந்தான். அதற்கு அவர் ''மோகன் நீ மன்னிப்புக் கேட்பதை விட உனது தாயிடம் கேட்பது தான் சிறந்தது.'' என்றார். மோகன் அழுதுகொண்டு அருகிலிருந்த கபிலனை ஆரத்தழுவினான். பின்னர் தனது வீட்டிற்கு ஓடிச்சென்றான்.

அங்கே கவலையில் தோய்ந்திருந்த அவனது அன்னையின் காலில் விழுந்தான். மோகன் ''அம்மா என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் அருமை தெரியாமல் உங்களை உதாசீனப்படுத்திவிட்டேன். இனிமேல் அந்தக் குற்றத்தை செய்யமாட்டேன்'' என்றான். மோகனது தாய் ''மோகன் நீ எப்போது உன்னை மன்னித்துக்கொள்ளும் படி என்னிடம் வேண்டியோ அப்போதே நீ திருந்திவிட்டாய். உன்னைப் பெற்றதில் அடைந்த மகிழ்ச்சியை விட நீ திருந்தியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி பெரிதாக உள்ளது'' என்று கண்ணீர் சொரிந்தாள். மோகன் தனது சிரசை தனது அன்னையின் காலில் தாழ்த்தினான்.

''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை''

-முற்றும்-

**J. மயூரன்**
**8 Q**


with best compliments from ;-
ESWARAN BROTHERS DUTY FREE (Pvt) LTD
No:33A,Arrival Lounge
Bandaranayake International Airport,
Katunayake
tel:0112252520
Agent For:-
Titan,Maxima wrist watches Preett Mixy grinder and Ideal pressure cooker
A Members of
THE VTV GROUP

## பாடசாலைக்குள்ளான போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# நவராத்திரி விரதம்

உலகம்போற்றும் மதங்களில் சிறப்பான ஒன்று எங்கள் சைவம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றியது சைவம். குமரி முதல் இமயம் வரை பரவியிருக்கிறது சைவம். இவ்வாறு தன்னகத்தே ஏராளமான புகழ்களை கொண்டிருக்கின்றது. எங்கள் சைவசமயம். சங்கப்பலகையேறிய சாகாத பல இலக்கியங்களை கொண்டுள்ளது சைவசமயம். இவ்வாறு தலைசிறந்த சைவம் போற்றும் பண்டிகைகளும், விரதங்களும் பல அவற்றுள் ஒன்றே நவராத்திரி விரதமாகும்.

மனம் பொறிவழிப்போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் அல்லது சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம், எனும் மூன்றினாறும் இறைவனை மெய்யன்போடு வழிபடல் விரதமாகும். அத்தகைய விரதங்களுள் சிறப்புடையது நவராத்திரி விரதம் ஆகும்.

பொதுவாக விரதங்கள் அனைத்தும் ஒரு இறைவனுக்காகவே அனுட்டிக்கப்படுகிறது. ஆனால் நவராத்திரி மூன்று தெய்வங்களுக்காக ஒரு சக்தி விரதமாக சைவசமயிகளால் அனுட்டிக்கப் படுகிறது. ஐப்பசி மாதம் ஒன்பது நாட்கள் தொடர்ந்து இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது. நவராத்திரியில் நவம் என்பது ஒன்பதைக் குறிக்கின்றது. நவராத்திரி விரதத்தின் நோக்கங்கள் மூன்றாகும். அவையாவன வீரம், செல்வம், கல்வி ஆகும். வீரத்திற்காக துர்க்காதேவியையும். செல்வத்திற்காக லட்சுமியையும், கல்விக்காக சரஸ்வதியையும் முறையே மூன்று மூன்று நாட்கள் துதித்து விரதமிருக்கின்றனர். விரதங்களுக்குரிய விதிகள் பல உள்ளன. உணவை சுருக்குதல் அல்லது விடுத்தல் விரதங்களுள் பிரதானமானது. நாம் ஒருவேளை மட்டும் உணவருந்தி அடுத்த இரண்டு வேளையும் உபவாசமிருக்கலாம் அல்லது ஒருவேளை உணவை மாத்திரம் விடலாம் அல்லது முழுநாளும் உபவாசமிருந்து பின் இரவு பாலோ அல்லது பழமோ அருந்தலாம். இவற்றுள் உபவாசமிருத்தல் மிகச்சிறப்பு வாய்ந்தது. நவராத்திரி விரதமிருப்பதால் அதாவது நவராத்திரி விரதத்தை நாம் அனுப்பித்தால் எமக்கு பல பயன்கள் கிட்டுகின்றன. ஆனால் நாம் சிறந்த அனுகூலத்தை பெற நவராத்திரி விரதத்தை சரிவர, தூய்மையாக விதிகளின்படி முறையே அனுட்டித்தால் ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசி முதல் நவமி வரை அனுட்டிக்கப்படும். இவ் விரதம் மிகச்சிறப்புடையது. நவராத்திரி விரதம் நிறைவேறிய பின் பத்தாம் நாள் விஜயதசமி அனுட்டிக்கப்படுகிறது. இத் தினத்தன்று மாணவர்களுக்கு அட்சராப்பியாசகம் (ஏடு துவக்குதல்) புது பலைகளை பழக ஆரம்பித்தல் போன்ற பல மங்களகரமான வைபவங்களும் இடம்பெறுகின்றன. இவ் விரதத்தின் சிறப்பு பற்றி பல புராண நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறான ஒரு சிறப்புவாய்ந்த விரதத்தை தன்னகத்தே கொண்டிருப்பதால் சைவமும் பாரிய புகழை பெறுகிறது. நவராத்திரி விரதத்தை அனுட்டித்து பயன் பெற்றோர் கோடிக்கணக்கானவர்கள். சக்தியின் அருள் கிடைப்பது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால் இவ்விரதத்தை அனுட்டிப்பதால் மூன்று சக்தியின் அருளும் ஒன்றாக கிடைக்கின்றது.

ஆகவே இத்தகைய சிறப்புடைய நவராத்திரியை சைவசமயிகளான நாமும் சரிவர அனுட்டிப்போம். !!!

சக்தியின் அருளைப் பெறுவோம்!!!

* * *

**S. நிரோஷன்**
**8 R**

தத்துவம்

## யாரைத் தொழுவது?

பல தேவராக வணங்காமல் ஒரே மூர்த்தியாகத் தெய்வத்தை உபாஸனை செய்வதற்கும் இந்துமதம் இடங்கொடுக்கிறது. இவ்வித உபாஸனை சித்தத்தை எளிதிலே ஒருமுகப்படுத்தும் பக்திக்கு இதுவே சுலபமான வழி ஆதலால், வீர சைவன், வீர வைஷ்ணவன் இவர்களுடைய உபாஸனை வேத விரோதமில்லை. இதர தெய்வங்களை விஷயந் தெரியாமல் பழித்தால், அதுதான் வேத விரோதம். வட ஹிந்துஸ்தானத்தில் சில இடங்களில் ராமன், கிருஷ்ணன் கஷி என இரண்டு பகுதிகளாகப் பிரித்து சிலர் பரஸ்பரம் பகையைச் செலுத்துகிறார்கள் அதெல்லாம் மடமையின் லக்ஷணம்.

பிரம்மாவுக்குக் கோவில் அரசமரத்தடியில் பிள்ளையார் கோயிலாக ஊர்தோறும் எற்பட்டிருக்கிறது. சிவனுக்கும் பார்வதிக்கும் விவாகம் நடந்தபோது, முதலாவது கணபதிப்பூஜை நடந்ததாக வேதம் சொல்கிறது. வேதத்தில் அக்னியை இரண்டு ரூபமாக்கி, ஒரு ரூபம் குமரனாகவும் தேவசேனாதிபதியாகவும், மற்றொரு ரூபம் தேவகுருவாகவும் சொல்லப் படுகின்றது. அக்னியை ருத்ரனுடையபிள்ளையென்று வேதம் சொல்லுகிறது. அக்னியை ருத்திரனென்றும் சொல்லப்படுகின்றது. தேவகுரு, அமிர்தவாக்கையுடைய பிரஹ்மஸ்பதி, கணநாதன் அவனையே இந்துக்கள் சகல பூஜைகளிலும், சகல கர்மங்களிலும் முதலாவது வணங்குகின்றனர். வேத புராணங்களில் சொல்லப்படும் மூர்த்திகளெல்லாம் ஒரே பரமாத்மாவின் கலைகளென்பதை இந்துக்கள் எப்போதும் மறக்கக்கூடாது. ஒழுக்கத் தொழுக்கீற்றாயின், கலியுகம் ஒன்றமில்லை! என்று நம்வாழ்வார் சொல்கிறார்கள். இந்துக்கள் தங்களுடைய வேதப்பொருளை நன்றாகத் தெரிந்து கொண்டு கூடித்தொழுவாராயின் கலியுகம் நீங்கிப் போய்விடும்.

**வி.ஜீவிதுஷன்**
**8 R**



பாடசாலைக்குள்ளான போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# ஆணி வேர்

ஜனத்திரள் இன்று எதையோ எதிர்பார்த்தவண்ணம் எறும்புகள்போல் படையெடுக்கின்றன. "யாருக்கு!" எனும் வார்த்தை அப்போது எல்லோரிடத்திலும் அலைபாய்கிறது. அவ் ஜனத்திரள் சுகததாச உள்ளக அரங்கிற்கே படையெடுக்கின்றன. ஆம் இன்று அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டியின் இறுதிநாள். "இலங்கையின் இளம்புயல்" எனும் பட்டம் யாருக்கு என்பதே ஜனத்திரளின் கேள்வியாகும்.

போட்டிகள் ஆரம்பமாகின. இறுதியில் ஓட்டப்போட்டி நடைபெறுகிறது. அதில் பங்குபெறும் மாணவர்கள் அறிவிக்கப்பட்டனர். போட்டி ஆரம்பமாகியது. அப்போது மேடையிலிருந்து "கமலன், கமலன்" என ஓர் ஒலிப்பிளம்பு தோன்றியது. ஆம் அனைவரது எதிர்பார்ப்பும் கமலனாகும். இறுதியில் ஓட்டப்போட்டி முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டது. "கமலன் முதலாமிடம்" என அறிவிக்கப்பட்டபோது அரங்கிலிருந்து மகிழ்ச்சிப் பெருக்குடன் அனைவரும் ஆரவாரித்தனர். எங்கும் ஆனந்த வெள்ளம். ஆனால் ஓரிடத்தில் மட்டும் சலனம். ஆம் அது சலனமா? ஆனந்தக் கண்ணீரா? ஆனந்தக்கண்ணீரே. அழுதது வேறுயாரும் இல்லை. கமலனின் அம்மா தான். கமலனின் அம்மா அரங்கில் யாரோ ஒருவரை நோக்கி நன்றி செலுத்தினார். அவர் தான் டாக்டர்.மு.விரதராசன்...

சிலவருடங்களுக்கு முன்பு....
இன்று பங்கஜத்தின் வீட்டில் ஒரே குதூகலம். பங்கஜத்திற்கு ஆண்குழந்தை பிறந்துள்ளது. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்து அனைவரிடமும் ஆசீர்வாதம் பெற்ற பங்கஜம் தனது குழந்தையுடன் படுக்கையறை சென்று நித்திரையில் ஆழ்ந்தாள். ஒரு வருடங்கள் உருண்டோடின....

பங்கஜம் படுக்கையறையில் குழந்தையை தூங்கவைத்துவிட்டு அருகிலிருந்த சமையலறைக்குள் வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென அலுமாரியின் மேலிருந்த அரிசிவாளியை கைதவறி கீழே விழுத்திவிட்டாள். டபார் என்று ஒரு பாரிய சத்தம். பங்கஜத்தின் முகத்தில் ஒரே தடுமாற்றம். ஏதோ தவறு செய்தவள் போல் நடுங்கினாள். அந்தப் பயம் தனது குழந்தை கமலன் சத்தம் கேட்டு விழித்துவிடுவானோ என்பதாகும். ஆனால் அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை. படுக்கை அறைக்குள் குழந்தை ஒன்றும் அறியாதவனாய் தூங்கிக்கொண்டிருந்தது. திடுக்கிட்டாள் பங்கஜம். என்ன தன் குழந்தை நிம்மதியாக நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறதே என்பதாகும். உடனே தனது கணவன் குமாரிற்கு தொலைபேசியால் அழைப்பு விடுத்தாள். "என்னங்க நம்ம புள்ளக்கு ஏதோ ஆச்சுங்க" என கூறி தனது கணவனை வரவழைத்தாள்.

குமார் ஒரு வைத்தியருடன் வந்து குழந்தையை பார்த்தான். டாக்டர் விரதராசன் குழந்தையை பரிசோதித்து விட்டு "டோன்ட் வொறி மிஸிஸ் குமார். நாசொல்றத கேட்டு நீங்க பயப்பட கூடாது. உங்க மகனுக்கு பிறவிலேயே காது கேட்காது. ஐ ஆம் சொறி" என கூறினார். இதைக் கேட்ட பங்கஜம் திடுக்கிட்டு அழத்தொடங்கிவிட்டாள். உடனே டாக்டர் "கவலைப்படாதீங்க. உங்க குழந்தைக்கு காது தானே கேட்காது. அவனுக்கு மற்ற

பாகமெல்லாம் ஒழுங்கா வேலை செய்யும் தானே. யெஸ் நீங்க ஏன் இவன ஒரு நல்ல ஸ்போட்ஸ்மன் ஆக்க கூடாது'' என கூறினார். அதற்கு பங்கஜம் ''எப்பிடி டாக்டர் என்ட பிள்ளைக்கு இப்பிடின்னு ஒன்டிருக்கு எண்ணு தெரிஞ்சும் நா அவன ஆறுதலா வளர்ப்பன்?'' என புலம்பியபடி அழுதுகொண்டிருந்தாள்.

உடனே டாக்டர் ''நோ மிஸிஸ்குமார் உங்கள மாதிரி இப்பிடி அம்மாமார் இருக்கிறபடியால் தான் இப்பிடிப்பட்ட குழந்தைகள் அநாதை மடத்துக்கு போறாங்க. நீங்க உங்கட மகன நல்லா வளர்த்து ஒரு பெரியாளா மாத்தினா உங்களுக்கு தானே அது பெருமை. சோ கமலன நீங்க ஒரு நல்ல ஸ்போட்ஸ்மன் ஆக்கோணும். நானும் அதுக்கு உங்களுக்கு கெ.்.ல்ப்பன்றன்.'' என கூறி பங்கஜத்தின் மனதில் ஒரு தைரியத்தை வரவழைத்தார். அது மட்டுமல்லாது கமலன் என்ற ஒரு பெரிய மரத்துக்கு அவர் ''ஆணிவேராக இருந்தார். பங்கஜத்துடனும், குமாருடனும் இணைந்து டாக்டர் ஒரு பெரிய பலத்தை கமலனுக்கு வழங்கினார். அதன் விளைவாக அவன் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் வெற்றிபெற்று அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவானான்.

நிகழ்காலம்.....
கமலன் பரிசுக்கோப்பையுடன் அம்மாவிடம் ஓடிவந்து தனது வெற்றியை தெரிவித்தான். அதற்கு அவனது அம்மா கமலனை டாக்டரிடம் அழைத்து சென்று ஆசீர்வாதம் பெற்றுவித்தாள். அவள் அப்போது டாக்டரை ஒரு நன்றிப் பார்வையோடு நோக்கினாள். அப்பார்வையில் ஆயிரம் நன்றிகள் இருந்தன. தனது மகன் கமலன் எனும் விருட்சத்திற்கு ஆணிவேராக இருக்கும் டாக்டரை அவள் என்றும் தனது நினைவிலும் நன்றியிலும் கலந்து வைத்துள்ளாள். வைத்திருப்பாள்.
இது திடம்.

**E. பிரகலாதன்**
**10 R**



**பாடசாலைக்குள்ளான போட்டிகளில் மேற்பிரிவில்
முதலிடம் பெற்ற "சிறுகதை"**

## வாய்சொல்லில் வீரரடி

"அம்மா பசிக்கிதும்மா. சாப்பாடுபோடு" என்ற குரலுக்கு சொந்தக்காரன் விஜய். அவனின் அம்மாவின் பெயர் தனலஷ்மி. "கொஞ்சம் பொறுப்பா இதோ எடுத்திகிட்டு வாறேன்" என்றாள் தனலஷ்மி. தனலஷ்மி மிகவும் அன்பானவர். பக்கத்து வீட்டு செல்லம்மாவின் குழந்தைகள் மேலே மிகவும் பாசமானவர்.

ஆனால் அவர் மகன் விஜய் அவருக்கு எதிர்மாறான முரடன். கோபக்காரன் ஆனால் நன்றாகப் படித்தவன். விஜயின் அப்பா புஸ்பராஜன். அலுவலக கடமை புரிகின்றார். அவரின் அலுவலகத்தில் அவருக்கு கொஞ்சம் விரோதம் இருக்கின்றது. ஏனெனில் அவர் நேர்மையானவர். "கடமை கடமை என கடமையையே மூச்சாகக் கொண்டவர்.

ஒரு நாள் அவரின் அலுவலகத்தில்.... "Mr புஸ்பராஜ்... Mr புஸ்பராஜ்...என் ரூமுக்கு வாங்க" என்ற உபஅதிகாரியின் குரல்கேட்டு திரும்பினார் புஸ்பராஜன். என்ன நடக்கப் போகிறதோ? என்ற பய உணர்வுடன் உள்ளே போனவருக்கு ஒரு இன்பஅதிர்ச்சி காத்திருந்தது.

"Mr புஸ்பராஜ்"

"சார் புஸ்பராஜ் இல்ல புஸ்பராஜன்"

"ஆ மன்னிச்சுக்கிக்க. Mr புஸ்பராஜன் உங்களை பாராட்டி கௌரவிக்கப் போறாங்க" என்றார் உயர் அதிகாரி.

"என்ன கௌரவிக்க போறாங்களா யாரு? எதுக்காக?

"நம்ம கம்பனி முதலாளி தான் உங்களை பாராட்டி கௌரவிக்க பேராராம்" எதுக்கு? என்னத்துக்குன்னு? எல்லாம் எனக்குதெரியாது" என்றார் உயர்அதிகாரி.

புஸ்பராஜன் முகத்தில் ஒரு இன்பக்கலை தோன்றியதுடன் ஒரு கேள்விக்குறியும் தோன்றியது.

ஆழ்ந்த யோசனையில் இருந்தவாறே வெளியே வந்த புஸ்பராஜனை சக ஊழியர்கள் குசலம் விசாரித்தனர்.

"புஸ்பராஜ்" என்னத்துக்கு உயர் அதிகாரியின் ரூமுக்குஉங்களை அவர் கூப்பிட்டாரு"
"என்ன விஷேசம்?"

"எதும் தப்பு செஞ்சிட்டிங்களா?"

எனபல கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார்கள்.
புஸ்பராஜன் "தெரியல எதுக்கு கூப்பிட்டாங்கனு உள்ளே போயிப் பார்த்தா ஒரே அதிர்ச்சி. என்னாடான்னா? அந்த மனுஷன் என்ன பார்த்து உங்களை கௌரவிக்கபோறாங்களா? அதுக்காகத்தான் உங்களை கூப்பிட்டேனுட்டார்" என்றார்.

"பிறகு" சக ஊழியர்களின் குரல்.

"பிறகென்ன எதுக்கு? என்னத்துக்குன்னு கேட்டேன். தெரியாதுனுட்டார்"

சரி சரி போங்க ஏதாச்சும் பெரிய விசயமாத்தான் இருக்கும். என்ன ஏதாவது கொடுத்தி ங்களா?" என்றான் சக ஊழியன் குமார்

"நான் என்ன கொடுக்க? வேலையப் பாருங்க" என்று ஆத்திரத்துடன் கூறி தன் இடத்துக்கு போய்விட்டார்.

* * *

"என்ன விஷயமாம்" என்றார் தனலஷ்மி. "எனக்கு அதுத்தான் தெரியல புள்ள" என்னனு பாப்போம்" இது புஸ்பராஜன்

* * *

அடுத்தநாள் ஆபீஸில் "இந்த மனுஷனுக்கு ஏதாவது பண்ணணுமே என்ன பண்ணலாம் சரி யோசிப்போம். கரட் நல்ல ஐடியா வாங்க" சக ஊழியர்கள்.

"புஸ்பராஜன் என்ன காரியம் செய்திருக்கிங்க. உங்களை எவ்வளவோ நல்ல மனுஷனுநெனச்சேன் ஆனா இப்படி கேவலமா நான் நினைக்கல. என்ன இருந்தாலும் இப்படி செய்தது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?" என்றார் உயர் அதிகாரி."என்ன சார் சொல்றீங்க . ஒன்னுமே புரியல "கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கசார். என்றார் புஸ்பராஜன்.

"ஓ.... உங்களுக்கு ஒன்னுமே தெரியாது செஞ்சதையும் செய்திட்டு ஒன்னுமே தெரியலையாம்." சக ஊழியன் குமார்.

நீங்க அலுவலக ரகசியத்த வேறொரு கம்பனியிடம் வெறும் 5000/= க்கு வித்தது சரியில்ல!!. என்றார் உயர் அதிகாரி.

"என்ன! நான் அப்படி செய்யமாட்டேன் சார்." என்றார் புஸ்பராஜன்.

"பாருடா இந்த மனுஷன செய்ரதையும் செஞ்சுபுட்டு இப்ப ஒன்னுமே தெரியாத மாதிரி நடிக்கிராரு"

"சீ நானா இருந்தா நாக்க புடிக்கிட்டு செத்துபொயிருவேன்"

"இப்படியொரு வாழ்க்கை தேவையா?" இவ்வாறு வெளிவந்த சொற்கள் புஸ்பராஜனின் இதயத்தை அடைத்தன.

* * *

"சார் கொஞ்சம் பொருத்துக்குங்க வலி குறைஞ்சிடும்" என்ன புஸ்பராஜனுக்கு வலி? என்ன நடந்தது இக் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியவர்கள் அலுவலக ஊழியர்களின் வாயாகும். இப்போது பாரதியாரை நினைவுபடுத்துவோம்.

நெஞ்சம் பொறுக்குதில்லையே இந்தநிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்

**P. கோகுலபிரதீப்**
**11 R**

## கவிதை

### சமாதானமே உன் விலை என்ன?

இலங்கையின் விவசாயத்துறையில் ஒரு துளிகூட நீரில்லை
ஆனால் செல்மழை பொழிகிறது
யுத்தத்தின் செலவோ பல்லாயிரம் கோடி
இதனால் இலங்கையின் பொருளாதாரம்
வந்த இடம் தெருக்கோடி

நகமும் சதையும் போலிருந்த நாம் இன்று
சதையிலிருந்து பிடிங்கி எடுக்கப்பட்ட
நகம் போன்ற இரத்த சுனாமியில் முழ்கடிக்கப்பட்டுள்ளோம்
இந்த இந்து சமுத்திர முத்து நிலையிது

ஆய்மணிப்பைப் பூண்கள் பல்லாயிரம் கோடி கொடுத்தாலும்
விலைக்கு வாங்க முடியாத இந்த சமாதானம்
இந்த சமாதானம் எனும் சங்கதியைக் கொடுக்கும்
குபேரன்கள் குழப்பாமல் இருத்தல் வேண்டும்.

இந்த சமாதானத்தின் விலைதான் என்ன?
நிம்மதியில்லாத்துன்பம் இனிமேலும் வேண்டாம்
இனிமேலும் யுத்தத்தில் பாதிக்க நம் சகோதரர்களால் முடியாது
ஆனால் யுத்தத்தை நிறுத்த எம்மால் முடியுமல்லவா?

கேள்வி என்றொன்றிருந்தால் பதிலொன்றிருப்பது போல
யுத்தமொன்றிருந்தால் சமாதானம் நிச்சயமுண்டு
அதனை ஒரு நாள் நாம் கண்டு ஆனந்தம் எனும்
தாடாகத்திலே நிம்மதியாக நீந்தலாம்.



**K.Prasath**
**11 Q**

*With the best compliment*

# Master Fashion



106,1, Second cross Street
Colombo 11

**T.P 011 2436936**

## விநாயகருக்கு விருப்பமான சில பொருட்களும் தத்துவங்களும்.

**விளாம்பழம்.**

விளாம்பழத்தின் புறஓடும் உள்ளீடான பழமும் தொடர்பில்லாமல் வெவ்வேறாக இருக்கின்றன. இரண்டிற்கும் தொடர்பற்ற இந்நிலை பழம் பழுத்தபிறகு அமைகின்றது. உடலும் உள்ளமும் பக்தியில் ஈடுபடும் போது அவைகளுக்கு எந்த பந்த பாசமும் தொடர்புகட்டும் பற்றும் இருக்கக்கூடாது. இந்த பற்றற்ற நிலையை உணர்த்துவது விளாம்பழம்.

**மோதகம்**

இதனை எருக்காலம் கொழுக்கட்டை என்று கூறுவது வழக்கம். விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது. கொழுக்கட்டை மாவுக்கு பூரணம் வைத்து மடித்து செய்யப்படுவது. [முதல் - ஆனந்தம், சுவைத்து உண்ணும் போது ஆனந்தத்தை தருவது மோதகம்]

மாவு - உடல் பூரணம் - உயிர் பூரண பக்குவத்துடன் செய்யப்படுகின்றன.உணவுக்கலவை அவித்த பயற்றம் பருப்பு + சக்கரை + தேங்காய் துருவல் இவற்றின் கலவை பூரணமாக நிறைவான உயிர் முத்தி பெறக்கூடிய முழுத்தகுதியைப் பெறுகின்றது. இது மோதகம் உணர்த்தும் உட்கருத்து. மோதகம் இனிமையாகவும் , சுவையாகவும் எல்லோரும் விரும்பும் பொருளாக இருப்பது போல் விநாயகரும் உயிர்களுக்கு இனியவராக இருக்கின்ற இன்னொரு தத்துவத்தையும் விளக்குகின்றது.

**தேங்காய்.**

வழிபாட்டிற்கு உடைக்கப்படுகின்ற தேங்காய் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. தேங்காயில் மட்டை, நார், ஓட்டுப்பகுதிகள் என்ற மூன்றும் மும்மலங்களை குறிக்கும். இவை நீக்கப்பட்டவுடன் நீர் - உயிர் - இறைவனது திருமுன் அர்ப்பணிக்கப்படுகிறது. இது ஒரு கருத்து.

தேங்காயின் வெண்மை சத்துவக் குணத்தையயும் மூன்றாம் கண் ஞானக் கண்ணையும் தெரிவிக்கின்றன. அதாவது சத்துவக் குணத்துடன் பக்தியுடன் சஞ்சலம் இல்லாமல் ஞானக்கண்ணால் இறைவனை தரிசிக்க வேண்டும் என்ற வழிபாட்டு முறையை இது தெரிவிக்கின்றது. இது மற்றொரு கருத்து.

**சிதறு தேங்காய்**

நேர்த்தியின் பொருட்டுத் தேங்காய்களைச் சிதறுகாய் அடிப்பது (சூரைக்காய் அடிப்பது) விநாயகருக்கு மட்டும் உரியது. சிதறுகாய் அகங்காரத்தின் முடிவைக் குறிக்கின்றது. சிதறு காயைச் சிறுவர்கள் எடுப்பார்கள். இது உடைப்பவர் மறைகமாகச் செய்யும் தர்மமாகும். எனவே விநாயகருக்கு முன் அகங்கமண்டை ஓடு சிதற வேண்டும். அமுதமான அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பன சிதற வேண்டும். அமுதாயமான அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பன சிதறுதேங்காயின் உட்கருத்து.

**வெள்ளரிப்பழம்.**

தோலில் வெள்ளையான வரிகளைக் கொண்ட பழம் இது. நன்றாகப் பழுத்தவுடன் காம்பி லிருந்து கழன்று தரையில் விழுகின்றது. அது போலப் பற்றற்ற ஆன்மா உலகப் பிடியிலிருந்து விடுபட்டு முத்தியடைகின்றது.

**அறுகம்புல்**

ஆறு இடங்களில் வேர்களை ஊன்றி ஒரு கொடிபோல் வளர்வது அறுகு அல்லது அறுகம்புல் ஆகும்.

இது குளிர்மையானது. கோடைகாலத்திலும் வாடாது. இது அரிய மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அறுகம் புல்லை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் தணியும். அறுகம்புல் உடலின் எடையையும் ,தொப்பையும் குறைக்கும். நரம்பு தளர்ச்சியை நீக்கும். இரத்தப்புற்றுநோயைத் தணிக்கும். நஞ்சினை முறிக்கும். இரத்தச் சிவப்பணுக்களைப் பெருக்கும்.

இருமல், இதயக்கோளாறு , இரத்தச்சோகை முதலியநோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி" என்பது போல் உலகம் செழித்து வாழவேண்டும் என்பதை குறிக்க அறுகம்புல் சிறந்த வழிபாட்டுப்பொருளாக விளங்குகிறது.

***நல்ல சொற் பொருணாளும் நடாத்தவும்***<br>***எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்***<br>***வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்***<br>***வல்லமைக்குரியானை வாழ்த்துவோம்.***

**S. Bhavapriyan**<br>**4 J**



*With the best compliment From*

## *Progressive Builders & Resorts (Pvt) Ltd,.*

104/11, Grandpass Road,
Colombo - 14.

Tel: 011 4796741

# FASHION VEGAS

Dealers in textiles and Fancy goods

No.7, Ratnapura Road,
Avissawella

# Ragunathan Sivaventhan

*STUDENT*

5 J

**இந்துமாணவர் மன்றம் நாடளாவியரீதியில்**
**பாடசாலைகளுக்கிடையில் 28.09.2008 அன்று நடாத்திய**
**சமயத்திறன்காண் போட்டிகள் - 2008**
**முடிவுகள்**

## பேச்சுப்போட்டி

### கீழ்ப்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் இடம் | I. லக்சினி | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 2ம் இடம் | I. உஷண்யா | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 3ம் இடம் | S. பிரவீனன் | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | K. நந்தகோபன் | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கொழும்பு - 4 |

### மத்தியபிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | S.J. கணாந்தரன் | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கொழும்பு - 4 |
| 2ம் இடம் | S. சிவஹரினி | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | S.J. சஞ்சுதன் | புனித பெனடிக்கல்லூரி | கொழும்பு -13 |

### மேற்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | R. ஹேமாலினி | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 2ம் இடம் | S. சஞ்சீவன் | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | K. கஜனன் | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | M. கிஷாந்தன் | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு -13 |

## கவிதைப்போட்டி

### கீழ்ப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | K. சிவனுஜா | கணபதிவித்தியாலயம் | கொழும்பு -12 |
| 2ம் இடம் | G. கிஷாந்தன் | புனித பெனடிக்கல்லூரி | கொழும்பு -13 |
| 3ம் இடம் | M. அகினயா | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 3ம் இடம் | T. லாவண்யா | வுல்வென்டால் மகளிர்வித்தியாலயம் | கொழும்பு -13 |

### மத்தியபிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | R.D. பிரசாந்த் | புனித பெனடிக்கல்லூரி | கொழும்பு -13 |
| 2ம் இடம் | M. துளசி | வுல்வென்டால் மகளிர்வித்தியாலயம் | கொழும்பு -13 |
| 3ம் இடம் | N. வித்யா | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | M. ஜெயலக்ஷ்மி | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |

### மேற்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | R. இந்துஜா | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு -13 |
| 2ம் இடம் | C. நிரோஜினி | மெதடிஸ் கல்லூரி | கொழும்பு - 3 |
| 3ம் இடம் | A. தர்ஷன் | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 3ம் இடம் | R. கௌஷல்யா | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு -13 |

## சிறுகதைப்போட்டி

### கீழ்ப்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | R. ரகுவர்மன் | புனித பரிதோமாவின் கல்லூரி | கல்கிசை |
| 2ம் | இடம் | C. கௌஷல்யா | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 3ம் | இடம் | S. ஜான்சி | இந்துக்கல்லூரி | இரத்மலானை |
| 3ம் | இடம் | S. அனிஸ்டன் | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு - 13 |

### மத்தியபிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | S. வியதீஷ் | புனித பரிதோமாவின் கல்லூரி | கல்கிசை |
| 2ம் | இடம் | M. இளங்கோவன் | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு - 13 |
| 3ம் | இடம் | S. சஹானா | வுல்வென்டால் மகளிர்வித்தியாலயம் | கொழும்பு - 13 |
| 3ம் | இடம் | G. அர்ஷனபிரியா | கணபதிவித்தியாலயம் | கொழும்பு - 12 |

### மேற்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | K. ஜீவசினி | முத்துவல இந்துகல்லூரி | கொழும்பு - 12 |
| 2ம் | இடம் | H. திவ்யா | மெதடிஸ் கல்லூரி | கொழும்பு - 3 |
| 3ம் | இடம் | L. பவணீதா | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 3ம் | இடம் | G. நிசாந்தி | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை. |

## கட்டுரைப்போட்டி

### கீழ்ப்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | R. ரிதுஷா | புனித அன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 2ம் | இடம் | K. லாவண்யா | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 3ம் | இடம் | J. கீர்த்திகயினி | கணபதிவித்தியாலயம் | கொழும்பு - 12 |
| 3ம் | இடம் | L. ஆரபி | இந்துக்கல்லூரி | இரத்மலானை |

### மத்தியபிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | J. பிரியலக்ஷ்மி | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | கொழும்பு - 4 |
| 2ம் | இடம் | V. சிவரூபினி | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு - 13 |
| 3ம் | இடம் | P. சுதர்சிகா | வுல்வென்டால் மகளிர்வித்தியாலயம் | கொழும்பு - 13 |

### மேற்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | R. அகிலாஅருந்ததி | புனிதஅன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 2ம் | இடம் | S. அமுதபிரிய | புனிதஅன்னம்மாள் மகளிர்வித்தியாலயம் | வத்தளை |
| 3ம் | இடம் | T. பிரியங்கா | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 3ம் | இடம் | T. உதயராஜ் | விவேகானந்தாக்கல்லூரி | கொழும்பு - 13 |

## பண்ணிசைப்போட்டி

### கீழ்ப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | S. நாராஜினி | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |
| 2ம் இடம் | J. சிந்துஜா | கணபதிவித்தியாலயம் | கொழும்பு - 12 |
| 3ம் இடம் | V. வார்ஷ்நேயன் | பீற்றர்க்கல்லூரி | கொழும்பு - 4 |
| 3ம் இடம் | S. சியானி | சைவமங்கையர் கழகம் | கொழும்பு - 6 |

### மத்தியபிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | J. இந்துஜா | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | கொழும்பு - 4 |

### மேற்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | S. சதுர்ஷா | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | கொழும்பு - 4 |
| 2ம் இடம் | M. மயூரானந்தன் | D.S.சேனாநாயக்க கல்லூரி | கொழும்பு - 7 |

## சமய அறிவு வினாவிடைப்போட்டி

**1ம் இடம்**


**சைவமங்கையர் கழகம்** **கொழும்பு - 6**

S. அனுஷா
S.G. பிரியா
G. லக்ஷனா
R. வைஷ்ணவி
J. ஜெயவீரணீ

**2ம் இடம்**

**பம்பலப்பிட்டி இந்துக்** **கொழும்பு - 6**

S. சதீஷ்குமார்
N. அனோஷன்
R. நவநீதன்
S. கணாநந்தன்
J. கிஷான்



**3ம் இடம்**

**முகத்துவார இந்துக்கல்லூரி** **கொழும்பு - 15**

L. சுவேந்தினி
T. தர்ஷனா
P. தர்ஜினி
H. வசந்தா வர்ஷினி
T. மகேஷன்

*With the best compliment From*

# SUPER SILK

Dealers in Redymade Garments and Wollen Jersies

No.122-12A, Keyzer Street, Colombo - 11.
(Super Paradise Super Market)

Tel: 2436586

# LAKSHANKA HARDWARE

595A, Nawala Road,
Rajagiriya.

Tel : 0777 277747
0112864523

LEELA

## LEELA EXPORTS & IMPORTS

Manufactures Exporters & Importers

ISO 9001: 2000 Quality System Certified Organization

42, Bandaranayake Mawatha, Colombo-12, Sri Lanka.
Telephone : 2423399, 2440128 Fax : 94 11 2423414
E-mail : leelaexp@sltnet.lk
GOLD AWARD WINNER.
National Chamber of Exporters Award 2000

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கீழ்ப்பிரிவில்
முதலிடம் பெற்ற "கவிதை"

## மலர்களே மலருங்கள்

சமாதான மெனும் விடியலை நோக்கி
மலர்களே மலருங்கள்....
கல்வியெனும் சிகரத்தை நோக்கி
மலர்களே மலருங்கள்.....
போர் எனும் கொட்டுகின்ற மழையை நோக்கி
சமாதானம் எனும் குடைகளாய்
மலர்களே மலருங்கள்.....
பொறாமைஎனும் வேலியிலே பாசம் எனும் பூக்களாய்
மலர்களே மலருங்கள்.....
இனவெறி எனும் கொழுந்து விட்டெரியும் தீயிலே
குளிர்ந்த தண்ணீரை ஊற்ற
மலர்களே மலருங்கள்....
ஆணவம் எனும் முட்களிலே புற்தரையாய்
மலர்களே மலருங்கள்....
போதை எனும் சமுத்திரத்திலே அறிவுரை எனும் அருவியாய்
மலர்களே மலருங்கள்....
பாடல் எனும் காற்றிலே மெல்லிசை எனும் தென்றலாய்
மலர்களே மலருங்கள்....
உயிரிகள் உயிர்களைக் காக்க மருந்தெனும் பெயரில்
மலர்களே மலருங்கள்.....
நோய்கள் எனும் தீயதை அழிக்கும் மருந்தாய்
மலர்களே மலருங்கள்....
நட்பு எனும் பூஞ்சோலையிலே ஆதரவு எனும் தென்றலாய்
மலர்களே மலருங்கள்....
ஆபத்தெனும் வேளையிலே உதவி எனும் கரத்தை நீட்டி
மலர்களே மலருங்கள்.....
பஞ்சம் எனும் கொடுமையைப் போக்க உதவி எனும் நல்லதைச் செய்ய
மலர்களே மலருங்கள்.....
கடவுள் பக்தி எனும் நீரோட்டத்தை அடியார் எனும் ஓடங்களாய் கடக்க
மலர்களே மலருங்கள்.....
உயர்வு எனும் இமயத்தை நோக்கி
மலர்களே மலருங்கள்......
நடமாடும் தெய்வங்களான பெற்றோரை வழித்துணையாய் காக்க
மலர்களே மலருங்கள்.....
காலம் எனும் சக்கரத்திலே சுழல
மலர்களே மலருங்கள்.....
கனவு எனும் இலட்சியத்தை அடைய
மலர்களே மலருங்கள்.....
வாழ்க்கை எனும் தேனை சுவைக்க
மலர்களே மலருங்கள்......



மு. சிவனுஜா
கணபதி வித்தியாலயம்

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மத்தியபிரிவில்
முதலிடம் பெற்ற "கவிதை"

## சமாதான வெண்புறாவே

சமாதான வெண்புறாவே - இன்று
உனக்காய் பாடுகிறேன் புது கவிராகமே,
என் அன்பின் மணியாரமே - உனக்கு
அமைதியே உறவாகுமே.

அன்று எம் அருமை நாடு
இனியவை நிறைந்த பூங்காடு;
இன்று எம் தாய் வீடு - ஆகிவிடுமோ
நாளை ஓர் சுடுகாடு?

மானிடர் அன்பின் வாசம்
தினமும் எம் மண்ணில் வீசும்
ஆனால் எங்கள் ஈழ தேசம் - இன்று
மறந்ததே மனித நேசம்.


யுத்தமது எங்கும் நடக்க - ஐயோ
இரத்த ஆறு பெருக்கெடுக்க,
இனப்பித்தர் படையெடுக்க - முடியாது
என்னால் கூறாமலிருக்க.

வெல்லும் யுத்தம் செல்லும் பாதைகள் - கட்டுது
பலருக்கு பாடைகள்
மொழி அடிப்படை பிரிவுகள் - என்னுமே
அழிவின் அடைமொழிகள்.

சகோதரத்துவம் பெருகியே - அட
இன்பம் பெறுவோம் அனைவருமே
இனி யுத்தம் வேண்டாம் என்றுமே
புதிதாய் வாழ்வோம் தினமுமே.

அமைதிக்கு இயற்றுகிறேன் ராகங்கள் - இதற்கு
ஒளிதருவது பலரின் சமாதித் தீபங்கள்
பெருகட்டும் எமக்கு நல்லெண்ணங்கள் - பறக்கட்டும்
எங்கும் சமாதான புறாக்கள்!

**R.D.பிரசாந்**
**புனிதபெனடிக்கல்லூரி**
**கொழும்பு - 13**



பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மேற்பிரிவில்
முதலிடம் பெற்ற "கவிதை"

**பிணந்தின்னும் சாத்திரங்கள்**

வாழ்வதற்காகத்தான் வாழ்க்கையென்றால் - இங்கோ
சாவதற்காக வாழும் மாந்தர் சிலர்
சத்தியங்கள் சிதைந்ததினால் சாத்திரங்களெல்லாம்
சட்டங்களாக உருமாறிப் போனதிங்கே!

விஞ்ஞான உலகமதில்
விந்தையான வேடிக்கை கேளீர்
வேஷம் போட்டு குறி சொல்லும்
பழமையைக் கூறும் புதுமையாமே!

சாத்திரம் பார்த்து முகவரி இழந்தோம் - ஆனால்
எம் விடியல் எங்கோ விடைபெற்றுப் போனது! - இங்கோ
துன்பக் கூண்டினுள் மனிதக் குருவிகளாய்
வர்ணம் தீட்டப்படுகின்றோம்!

எந்நாளும் சுமைகளைத்தான் சம்பாதிக்க முடிகிறது!
இதற்கும் பங்காளிகள் எத்தனை பேர்!
வயதாகிப் போன சாத்திர சம்பிரதாயங்களாலே - சமுதாயம்
மூட சகதிக்குள்ளே மூழ்கடிக்கப்படுகிறது!

வீட்டுக்குள்ளே பெண்ணை முடக்கி!
வீண் பழிசுமத்தி சுகந்திரமதை தடுத்து
வஞ்நனை செய்யும் சாத்திரம் - இது
வஞ்சிக்கும் ஓர் தரித்திரம்!

பிள்ளையில்லாப் பெண்ணிற்கு
மலடியென்றும் நாமம் சுமக்க வைக்கும் சாத்திரம்!
தாலியிழந்த பெண்ணுக்கு
விதவைக் கோலமுடன் வாழ வைக்கிறது!

எம் ஓவியத்திற்கு விழி வைக்க மறந்து விட்டான்
கடவுளெனும் ஓவியன்!
உருக்கொடுத்த தூரிகையோ - இங்கே
துண்டுத் துண்டாய்..........!

தவமிழந்து தனித்திருந்து தரிசித்தாலும் - எம்மை விட்டு
தனிமையாகாது இந்த சாத்திரம்!
கல்லுக்குள்ளேயிருந்து கண்ணை மூடி விட்டான்
எம் வேதனையறியாத கடவுள்!

கொடியது கொடியது என்றுரைத்த ஔவையே
இதனிலும் கொடியது உண்டெனில் கூறுவாயாக!
இல்லை, சாத்திரங்கள் கொடியது என
ஏட்டில் திருத்துவாயாக!

பிணந்தின்னும் சாத்திரங்களால் - நமக்கு
முன்னுரையே இன்னமும் எழுதப்படவில்லை!
அதற்குள் எப்படி
முடிவுரையை நெருங்கி விட்டோம்?

இறைவன் இரக்கமற்றுப் போய்
எம் புலம்பல்களுக்கு மட்டும்
முற்றுப்புள்ளியிட மறந்து போனான்? - அதனால்
எம் புலம்பல் இன்னும் தொடர்கிறது!

இந்த அவலங்களை மாற்றியமைக்க
பாரதி, காந்தி போன்ற உயர்ந்த உள்ளங்கள்
மறுபடியும் உலக மண்ணில்
உதிர்த்திட வேண்டும்!


தளிராகிப் போன
மனித மனங்கள் மீண்டும்
வீறுகொண்டெழுந்து - புதிதாக
தளைத்திட வேண்டும்!

மீண்டும் புதியதொரு உலகம் படைப்போம்!
சாத்திரத்தை ஆழ்கடலினுள் அமிழ்த்தி விடுவோம்!
ஆம் அமிழ்த்தி விடுவோம்!

**R.இந்துஜா**
**விவேகானந்தாக் கல்லூரி**
**கொழும்பு - 13**

*With the best compliment From*

# K.Balasubramaniam



**98, Wolfendhal Street**
**Colombo 13**

**T.P 2436624**

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மத்தியபிரிவில்
முதலிடம் பெற்ற "சிறுகதை"

## அன்பே சிவம்

"வள்ளிபுரம்" எனும் ஊரிலே காவிரி ஆறு பாய்ந்து அவ்வூரையே செம்மையாக்கிய வண்ணமிருந்தது. அந்தக் காவிரி ஆற்றிலே செங்காவி எனும் பெயருடைய மீனவன் மீன்பிடித்துவந்தான். அக்காலத்திலேயே காலகண்டர் எனும் முனிவர் தினமும் காவிரி ஆற்றங்கரையில் மூச்சை அடக்கி சிவபெருமானை நோக்கி தவம் இயற்றிவந்தார். அம்முனிவரை நெடுநாள் அவதானித்து வந்த மீனவன் அம் முனிவரிடம் சந்தேகம் ஒன்றைக் கேட்க எண்ணினான். ஒருநாள் முனிவர் தவத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் மீனவன் அவரை நோக்கி ஏதும் அறியாத அப்பாவி போல "சாமி யோவ் சாமி நெடுநாளா ஒன்கிட்ட சந்தேகம் கேக்கனுனு இருக்கே. இன்னிக்காவது அது தீத்துகுனு உதவி புரிவியா"என கேட்டான். அதற்கு முனிவரோ "நகர்ந்து சென்று அமர்ந்து கேள்" என கர்வம் தொடுத்துக் கேட்டார். அதற்கு மீனவன் "சாமி..... நானு பாக்குறே எந்த நாளும் இங்க வர்ற, இங்கு ஒக்காற்ற நீபாட்ல தண்ணிய எடுத்து தண்ணீலயே விட்டுட்டு மூக்க புடிச்சுக்குட்டு முற்றூரு ஒக்காந்திரிக்கியே,... ஏ இப்படி?" என வினவ அதற்கு முனிவரோ "முட்டாள் நான் மூக்கைப் பிடித்துக்கொண்டு கனவு காணவில்லையடா. நான் தவம் இயற்றி சிவனை காண்கிறேன்" என சடாரென்று உண்மையைக் கூறினார். மீனவன் அதிர்ச்சியடைந்தவனாய் "சாமி நானு ஐஞ்சு வயசில் இருந்து சிவனை கும்பிட்றே. நீயென்னடானா சிவனை இவ்ளோ சுலபமா பாக்கிறேங்கிறியே. பொய்தானே?" என வினவ அதற்கு காலகண்டர் "நான் என்ன சிவனை ஒரு நாளில் பார்த்து விட்டேன் என நினைக்கிறாயா? நான் இறைவனைக் காண எத்தனை ஜென்மம் எடுத்தாலும் முடியும். ஆனா ஒன்ன மாரி கீழ்ஜாதிக்காரனுக்கு அதென்ன அவ்வளவு சுலபமா?" என்று கூறினார். அதற்கு செங்காவி "நா முயற்சி பண்ணி பாக்றே. சரி..... அதற்கு என்ன செய்யனும்னு சொல்லு" என கூறிய போது காலகண்டர் "ஓர் குருவிடம் உபதேசம் பெற வேண்டும்" என கூறினார். செங்காவிக்கு அந்த முனிவரைத் தவிர வேற எந்த முனிவரையும் தெரியாது என்பதால் அவன் முனிவரையே குருவாக ஏற்று உபதேசம் செய்ய காலகண்டரை வேண்டியபோது அவர் மீனவன் கீழ்ஜாதிக்காரன் என கூறி உபதேசம் செய்ய மாட்டாதாக கூறிவிட்டார். இதனால் கோபமடைந்த செங்காவி "யோவ், நீ என்ன சீடனா ஏற்கிறியோ இல்லையோ. நா ஒன்ன குருவா ஏத்துக்கிட்டேன். நீ உபதேசம் செய்யலனா நா ஓடுற காவிரியில குதிச்சு உசிர விட்றுவேன்." என கூறி காவிரி ஆற்றிலே குதிக்கச் சென்ற போது அவனைத் தடுத்து நிறுத்தி உபதேசம் செய்வதாக கூறிய காலகண்டர் "ஓம் தறா..... பறா...... அத்தாம்புஜ சிவனே யநமஹ" என கூறி அதை மறுபடியும் மீனவன் வாயால் சொல்லசொன்னார். அதற்கு செங்காவி "யோவ் அறிவிருக்குதாயா ஒனக்கு? நானே ஒரு படிப்பறிவில்லாத மீனவன். எனக்கு போய் தறா பறான்னா விளங்குமா. எனக்கு தெரியாது. நா "ஓம் சிவம்" னே சொல்றே. அதுக்கு சிவன் வருவாரா?" என வினவ "ஆம்" என முனிவரிடம் இருந்து பதில் வர அவன் காவிரி ஆற்றில் குதித்து "நா வெளியே இருந்து சொன்னா மூச்சு உட்றுவே அதனால மூச்சப்புடிச்சு இந்தக் காவிரியில மூழ்குறே" என கூறி "ஓம் சிவம்" என கூறியவாறு நீரில் மூழ்கினான்.

இவ்வாறு விட்டுவிட்டால் எனக்காக ஓர் உயிர் உலகை விட நேருமே என எண்ணி அவனைக் காண சிவன் திருவுளம் கொண்டார். சிவன் நேரே அவனிடம் சென்று அவனை நீரில் இருந்து எழச்செய்து அவனுக்கு அருள் புரிந்தார். இதனால் செங்காவி உடனே அவரின் குருசாமியிடம் சென்று "அவரு வந்திருக்காருயா. உடனே வந்து அவரை சிவன்

சொல்லு. அப்பதான் நான் நம்புவேன். வா....வா......." என கூறியபொழுது முனிவர் அவனுக்கு சிவன் மேல் பைத்தியம் வந்துவிட்டது எனவும் தான் வரப்போவதில்லை எனவும் கூறி செங்காவியை விரட்ட முற்பட்டபோது அவனோ "யோவ் நீ வராட்டா பரவாயில்ல. வந்து சொன்னா நல்லாயிருக்குமேன்னு நெனைச்சேன். சரி நா என்ன செய்யனு அத சொல்லு" என கவலையோடு கேட்க முனிவர் " சக்கரைப் பொங்கல் படைத்து பாதபூஜை செய் " என கூறிவிட்டு அங்கிருந்து தன் மடத்திற்கு சென்றுவிட்டார்.

மீனவன் உடனே வீட்டிற்கு சென்று மனைவியிடம் சக்கரைப் பொங்கல் வைக்க தெரியுமா எனக் கேட்க "ஆம்" என பதில்வர மகிழ்ச்சியோடு பொங்கல வைக்கச் சொன்னான். பொங்கலை செய்து வெகுநேரம் காத்திருந்தும் சிவன் வரவில்லையாதலால் அவன் "ஏண்டி எப்படி நம்ம வீட்டுக்கு வருவார். ஒரு பொங்கல செஞ்சு வெச்சுகிட்டு இருந்தா வருவாரா. குருசாமி வீட்டுக்குத்தான் போயிருப்பாரு. அங்க ஒன்னா? ரெண்டா? எத்தனை வகை வகையா செஞ்சு வெச்சிருக்காங்க" என தன்னுள்ளேயே புலம்பினான்.

அப்பொழுது அங்கு சிவன் தோன்றினார். அப்பொழுது மீனவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குதித்து ஆடி பாடி மகிழ்ந்தான். பிறகு பொங்கலை தொட்டுப்பார்த்து விட்டு "ஐயோ ஆறிருச்சே ஆறிருச்சே. எங்க சாமி போன? இனி நேரத்துக்கு வந்திடு" என கூறி சிவனை சாப்பிட செய்தான். மீனவனின் மனைவி "ஏ சாமி? பொங்கல் எப்படி இருக்குது?" என வினவ சிவன் "அம்மா இப்படியொரு பொங்கலை நான் உண்டதேயில்லை" என கூறினார். அதற்கு மனைவி "போ சாமி .நீ பொய் சொல்ற. நா இதுக்கு நெய் ஊத்தாமத்தே செஞ்சேன். என சினிங்கியவாறு கேட்க சிவன் "அம்மா எனக்கு நெய் தேவையில்லை. நான் ருசித்து சாப்பிடுவது மெய்யைத்தானே. அது உங்களிடம் உள்ளது" என கூறினார். பிறகு உண்டவாறே சிவன் அவர்களிடம் அவர்களுக்கு என்ன வேண்டும் என வினவிய போது அவர்கள் "எங்களுக்கு எதுவும் வேண்டாம். இதுவே போதும் "என கூறினர். சிவன் பிரமித்தவாறு போதும் என்று கூறிவிட்டீர்களே! இது நான் எதிர்பாராத பதில்" என கூறி போக முற்பட்டபோது செங்காவி அவரைத் தடுத்து "சரி, எங்க போற சாமி? குருசாமி எவ்வளவு பலவாரோ செஞ்சு வெச்சிருக்காரு. அவர பாக்க வேணா?" என வினவினான்.

சிவன் அதற்கு "நீ போய் அவர் என்ன செய்கிறார் என பார்த்து வா" என கூறி கண்ணை மூடி அமர்ந்தவாறே உறங்கினார்.

செங்காவி பார்த்துட்டு வந்து "சாமி! என்ன சாமி நாக்குக்கு ருசியா செஞ்சு நீ சாப்பிட முன்னரே அவுங்க சாப்பிடறாங்க?" என கவலை கணிந்த குரலில் கூற சிவன் "இதற்கு தான் நான் வரமறுத்தேன்" என கூறி மறைந்தார்.

செங்காவி வீட்டில் உண்டது போல் ஒரு நாள் அங்கு உண்டிருந்தால் முனிவர் எதையுமே மறுநாள் வைத்துப் படைக்கமாட்டார். அன்புக்கு ஆட்படுபவன் சிவன். செய்து வெகுநேரம் உண்ணாமலிருந்த மீனவனின் அன்புக்கு ஆட்பட்டார்.

"அன்பே சிவம்"

**S. வியதீஷ்**
**புனித பரிதோமாவின் கல்லூரி**

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கீழ்ப்பிரிவில்
முதலிடம் பெற்ற "சிறுகதை"

## கவலையில்லா மனிதர்கள்

"பூங்காவனம்" என்பது ஓர் அழகிய கிராமம். அங்கு ஒரே பூக்களும் பச்சைப் பசேலென புற்களும் இருந்தன. அந்த ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவாது குடும்பத்திற்கு அதிகம் செலவு செய்யாமல் வாழ்ந்தார். அவர் ஒருவரையும் மதிக்கவே மாட்டார். இதனால் ஒருவரும் அவரிடம் ஒரு உதவியையும் கேட்பதில்லை. காலம் போகப் போக அவரின் ஆணவம் தலைக்கேறியது. இவ்வாறு இவர் இருக்க

அந்த கிராமத்தில் வர்ணன் என்பவன் இருந்தான். அவன் அந்த ஊருக்கு புதிதாக வந்தவன் என்பதால் அவனிற்கு அந்த செல்வந்தரைப்பற்றி தெரிந்திருக்கவில்லை. அவன் ஒருநாள் சாலையோரமாய் நடந்து சென்றபோது, ஒரு அழகிய வீட்டைக் கண்டான்.

அவன் அந்த வீட்டிற்குள் நுழைந்தபோது அந்த வீட்டின் காவல்காரன் அவனை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. காவல்காரன் அவனை நோக்கிக்கேட்டான் உனது பெயரென்ன? உடனே எனது பெயர் வர்ணன் என்றான். காவல்காரன் உடனே வீட்டிற்குள் நுழைந்து "ஐயா உங்களைக் காண வர்ணன் என்பவன் வந்தருக்கிறான். அவன் ஊருக்கு புதிது போல உள்ளது ஐயா" என்றான். செல்வந்தரும் அவனை உள்ளே அழைக்குமாறு கூறினார்.

வர்ணனும் உள்ளே நுழைந்தான். அவன் அச் செல்வந்தரை நோக்கி "எனக்கு ஒரு வேலை வேண்டும். என்று கேட்டான். அதற்கு அச் செல்வந்தர் இங்கு வேலை இல்லை என்று கூறினார். வர்ணனும் ஒவ்வொரு நாளும் வேலை வேண்டி அச் செல்வந்தரிடம் சென்றுகொண்டேயிருந்தான்.

செல்வந்தரும் அதே ஒரு தொண தொணப்பென்று எண்ணி அவனை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார். அன்று அவன் செல்வந்தருக்கு சபதம் செய்தான். "நான் உன்னை விடச் செல்வந்தராய் ஆகுவேன்" என்று அவன் ஆரம்பத்தில் அவன் தனது நகைகள், வீடு என்பன முதலியவற்றை விற்று ஒரு காணி வாங்கி அதில் காய், கறி, பழங்கள் என்பவற்றை விதைத்தான். அவனிற்கு அதிக லாபம் வந்தது. அவன் சபதம் செய்ததுபோலவே அவன் செல்வந்தரானான்.


இதைக் கண்ட செல்வந்தர் பொறாமை கொண்டார். ஒரு இரவோடு இரவாக வர்ணனின் மனைவி பிள்ளைகளைக் கொலை செய்தான். இதை அறிந்த வர்ணன் கவலைப்பட்டான். அவனிற்கு அப்பொழுது ஆதரவாய் இருந்தவர் அவனின் பக்கத்து வீட்டார் தான். அவர்கள் வர்ணனிற்கு கூறியது ஒன்றுதான். போட்டியில் எப்படி வெற்றி தோல்விகள் சகயமோ அதைப்போல்தான் வாழ்க்கையில் கவலையும் சகயம் தான்.

அப்பொழுது தான் வர்ணன் விளங்கிக்கொண்டான் கவலை இல்லாத மனிதர்கள் உலகத்தில் இருக்கமுடியாது என்பது தான்.

நன்றி.

சு. ரகுவர்மன்
புனித பரிதோமாவின் கல்லூரி

*the best compliment From*



**ORIENTAL ENG. EQUIPMENT**

Importers, Stockist and Dealers
in Engineering Tools Equipment
and General Hardware Merchants


**412, Sri Sangaraja Mawatha,**
**Colombo - 10.**
**Tel : 2430060 Fax : 2390460**
**Mobile : 077-3073743**

STANLEY®
HAND TOOLS

Mitutoyo
PRECISION TOOL

DEWALT®
High Performance Industrial Tools

BLACK&DECKER



## பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற "சிறுகதை"

**பொறுத்தார் அரசாள்வார்**
**அம்பாளின் அடியவர்**

ஒரு சிறிய கிராமம் அக்கிராமத்தில் அனைவரையும் காப்பாள் மீனாட்சி. அக்கிராமத்திலே ஓர் பழைய கட்டிடம் அதில் அம்மன் சிலை. அவளே மீனாட்சி. அக்கோயிலைத்தான் அவ்வூர் மக்கள் அனைவரும் வணங்கி தம் இன்பம், துன்பம் அனைத்தும் பகிருவார்கள். அவ்வூரில் ஓர் அந்தணர் இருந்தார். அவருடைய தொண்டு அந்த மீனாட்சி அம்மனை அலங்கரிப்பதும் அவள் வசிக்கும் இருப்பிடத்தைச் சுத்திகரிப்பதுமேஇ அவருக்குப் பத்து வயதில் ஓர் மகன் இருந்தார். அவன் மிகவும் பக்தி கொண்டவன். தன் தந்தையுடன் சேர்ந்து அம்பாளுக்குத் தேவையான நைவேத்தியங்கள், தொண்டுகள் அனைத்திலும் தானும் செய்வதற்கு முன் நிற்பான். அவளுக்கு நான் இந்த உலகத்தில் ஒரு பெரிய அம்பாளினுடைய கடாச்சம் பெற்று பெரிய மாகானாகி , அம்பாளின் அற்புதம், அவளின் விளையாட்டுக்கள், அவளின் பெருமைகள் அனைத்தையும் இந்த உலகிற்கு எடுத்துக்கூறி பெரியமகானாக வரவேண்டும் என்னை அம்பாளுக்காக வாழ்ந்தவன் என்று கூறவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதனை தன் தந்தைக்கும் கூறினான். ஆனால் அவன் தந்தையோ சிரித்தபடி "அசடு அசடு நமக்கெல்லாம் படியளப்பவள் அம்பாள், அவளைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? பேசாமல் படி" என்று கூறினார். ஆனாலும் அவளுடைய குறிக்கோளில் அவனுறுதியாக இருந்தான்.

இவ்வாறு ஒருநாள் பாடசாலையில் ஓர் பேச்சுப்போட்டியில் கலந்து அம்பாளினைப் பற்றி பேசுபவருக்குப் பதக்கம் வழங்கப்படும் என அறிவித்தல் அவனுக்குக் கிடைத்தது. அவன் தனது வகுப்பாசிரியரிடம் சென்று தான் அதில்கலந்துகொள்ளப் போவதாகக் கூறினான். ஆனால் அவனுடைய வகுப்பாசிரியர் "உனக்கு அதொன்றும் தெரியாது, நாம் சிவாவை அனுப்பவுள்ளோம் எனக்கூறிவிட்டனர்" அவன் கவலைப்பட்டான் என்றாலும் தன்னுடைய இலட்சியத்தில் உறுதியாக நின்றான்.

சிலவருடங்கள் ஓடின அவனுடைய தகப்பனார் அம்பாளின் காலடியில் ஐக்கியமானார். சிறுவயதிலே தாயை இழந்தவனான அவன் தந்தையையும் இழந்தான். தனித்துவிட்டோமே என்று கலங்காது அம்பாள் துணையிருக்கின்றாள். அவளின் பெருமைகள், அற்புதங்கள் அனைத்தையும் இந்த உலக மக்களுக்கு கூறவேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்தையும் இந்த உலக மக்களுக்குக் கூறவேண்டும் என்ற எண்ணத்தில் தன்கால்கள் நடந்த திசையை நோக்கி நடந்தான். தான் எங்கு செல்கிறோம் என்று தெரியாமலே அம்பாளின் அற்புதங்கள், அவளின் அவதாரங்களின் மகிமை என்பவற்றைக் கூறியவாறு ஓர் பைத்தியக்காரனைப் போல் அலைந்தான். இவ்வாறு பல ஊர்கள் சென்று அம்பாளின் குழந்தை நான் அவளின் பெருமைகள் பற்றி நான் கூறவந்துள்ளேன் என்று கூறினான். ஆனால் அங்குள்ள மக்கள் அனைவரும் அவனுடைய கோலத்தைப் பார்த்து கல்லால் அடித்துத் துரத்தினார்கள். பைத்தியக்காரனைப் போல் ஓர்கிழிந்த அழுக்கு வேட்டியும் மேனியை மூடுவதற்கு ஓர் காவித்துண்டும் அணிந்தவனாய் நினைவு பூராகவும் அம்பாளின் சிந்தனையும் அம்பாளின் துதியைத் துதித்தபடி சென்றுகொண்டிருந்தார். இவ்வாறு சென்றுகொண்டிருக்கும் போது ஒருசிறுவனுக்கு அரவம் தீண்டி உயிர்போகும் நிலையில் இருந்தவைனை தன்னிடமிருந்த

அம்பாளின் பனிதமான தீர்த்தத்தைப் பருகவைத்து உயிர்பிழைக்க வைத்தான். பின் குறிக்கோளை நோக்கி செல்ல ஆரம்பித்தார். இவ்வாறு சென்றுகொண்டிருக்கும் வேளையில் இளைப்பாற எண்ணி ஓர் பாழடைந்த கோயிலில் சென்று ஓய்வெடுத்தார். அங்கே ஓர் அம்மன் சிலையைச் சூறையாடுவதற்காக இரண்டு கள்ளர்கள் அம்மன் சிலையை எடுத்துக் கொண்டு தப்பித்தனர். இதனைக்கண்ட சிறுவன் ஒருவன் "கள்ளன் கள்ளன்" என்று கத்தினான். அங்கிருந்தவர்கள் "இந்தப்பைத்தியக்காரன் தான் களவெடுக்க வந்துள்ளான்" என்றுகூறி அந்த அம்பாளின் அடியவனை அரசன் முன்னிலையில் நிலைநிறுத்தினார்கள். அந்த அரசும் அவனை இரண்டு மாதங்கள் சிறையிலடைக்கும் படி கட்டளையிட்டனர். சிறையில் பல துன்பங்களை அனுபவித்தான் எவ்வளவ துன்பங்கள் வந்தபோதும் எல்லாம் அம்பாளின் சோதனைகள் என்று நினைத்துக் கொண்டு அவர்கள் வழங்கும் தண்டனையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டான்.

நாட்கள் கடந்தன விடுதலை பெற்று வெளியேறினான். பின்பும் தன்னுடைய குறிக்கோளை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டும் என்பதற்கிணங்க கடவுள் என்றால் என்ன என்பது தெரியாமல் கடவுளின் அற்புதங்களையும் அவரைப்பற்றியும் அறியாத ஓர் ஊர் அது. அந்த ஊரிற்கு சென்ற அம்பாளின் அடியவர் அம்பாளின் பெருமைகள் பற்றிக் கூறினான். அங்குள்ளவர்கள் அவ்வடியவன் கூறியதைக் கேட்டு மனந்திருந்தினார்கள். இறைவன் உள்ளான் எங்களைக் காப்பவன் அவனே உயிர்கள் அனைத்தினையும் வாழவைப்பவன் அவன் இந்த உலகத்தினைக் காப்பவன் அவனே. எங்களுக்கெல்லாம் பெரியவன் அவனே என்று நம்பினார்கள். தங்கள் ஊரில்கோயில் இல்லை என்று எண்ணி கோயிலைக்கட்டவும் பல நிதிகளைச் சேகரித்து வேலையைத் தொடங்கினர். தன்னுடைய குறிக்கோளில் ஒரு வெற்றியைக் கண்ட அடியவன் மனமகிழ்ச்சியுடன் தனது இருப்பிடத்தை விட்டு ஆரம்பித்தான். இவ்வாறு சென்று கொண்டிருக்கையில் ஓர் கிராமமே நெருப்பில் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டு தன் அம்பாளின் துணையுடன் அம்பாளை நினைத்துத் துடித்தார் உடனே அம்பாளின் கருணையின்படி தீயினை அணைத்து அனைவரையும் காப்பாற்றினான். அதனை அறிந்த அந்த ஊர்மக்கள் அவனை இறைவனாக வணங்கினர் ஆனால் "இதற்கெல்லாம் அம்பாளின் கருணையே அவளின் சித்தமே நான். அவள்கூறுவதை நான் நிறைவேற்றும் அடியான்" என்றுகூறிவிட்டு புறப்பட்டார்.

இவ்வாறு இவருடைய அற்பதங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு அவரைச்சந்திக்க வேண்டுமென்றிருந்தார் ஒரு பெரிய மகான். அவரும் பெரிய மடங்கள், பெரியபாடசாலைகள் என்பவற்றை நிறுவியவர். பெரியதம்பி சிவதம்பிப்பிள்ளை என்னும் மகான். இவர்தன்னுடைய மடத்துக்கு இவரை அழைக்க வேண்டும். அவரின் பாதங்கள் என்னுடைய இந்த மடத்தில் படவேண்டும் என்று நீண்டநாட்கள் எண்ணியவாறு தெருவழியிலே நடந்துசென்று கொண்டிருந்தார். அப்போது ஓர் வயதானவரொருவர் எதிரிலே வருவது அவருக்குத் தென்பட்டது. மிகவும் வயதானவர் நடக்க முடியாது நடந்துவந்தார். உடனே சென்று அவரை அணைத்தபடி தன் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றார். அவரை அங்க ஓய்வெடுக்கம் படி கூறினார். அவரினைப் பற்றித் தெரியவல்லை. ஆனால் மற்றவர்கள் கூறுவதைப் பார்த்தார். இவர்தான் அம்பாளின் அடியவன் என்று தெரிந்துகொண்டு அவருக்கு பணிவிடைகள் செய்தார். அங்கிருந்த மாணவர்கள், மக்கள் அனைவருக்கும் அம்பாளின் பெருமைகள், அற்புதங்களை எடுத்துக் கூறினார். இவ்வாறு சமயப்பிரசாரம், நற்கருத்து என்பவற்றையெல்லாம் கூறி அங்குள்ளவர்களை அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கும் வழியையும் கூறினார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் தன்னுடைய பிரசாரத்தை மேற்கொள்வார். பின் இரவு நேரத்தில் தன்னுடைய அம்பாளை நினைத்து துதி

செய்துவிட்டு உறங்கிவிடுவார். காலையில் நேரத்துடன் எழுந்து அம்பாளுடைய துதியை ஓதுவார். இவ்வாறு நாளுக்கு நாள் அம்பாளினுடைய துதியை பாடுவதும், அவளைப்பற்றிக் கூறுவதுமான இருந்த அம்பாளின் அடியவனின் கனவில் அம்பாள் தோன்றினாள்.

"அடியவனே நீ நினைத்தது நடந்து விட்டது.
உன்னுடைய குறிக்கோள் நிறைவேறியது.
நீ இனி இங்கு இருப்பது நல்லதல்ல.

என்னிடம் வந்து சேர்ந்து விடு" என்று கூறிவிட்டு மறைந்தது ஓர் உருவம். காலையில் இவரின் பிரசரத்தை கேட்க அனைவரும் கூடினர். ஆனால் அவரைக் காணவில்லை. எங்கே என்று தேடியவாறு அவர் இருந்த இருப்பிடத்தை நோக்கி சென்றனர் மக்கள். அனைவரும் அதிர்ச்சியில் திகைத்தனர். உயிரற்ற உடல் மட்டுமே காணப்பட்டது. அருகில் ஓர் அம்பாளின் சிலை மட்டும் இருந்தது.அனைவரும் அவரைப் பார்த்து அம்பாளிடம் சென்றுவிட்டார். அவரை அம்பாள் அழைத்துவிட்டார் என்று கூறி அம்பாளின் இருப்பிடத்தின் அருகே ஓர் சமாதியைக் கட்டினார்கள். அவரின் சரீரத்தை புதைத்தனர். அவர் இல்லாவிடினும் அவரின் குறிக்கோள் நிறைவேறிவிட்டது. ஓர் பெரிய மகானாக திகழ்கின்றார். அவரின் பெருமைகள் அம்பாளின் பெருமை போல் உலகெங்கும் பரந்து விரிந்து தெரிகின்றது. அவரைப்பற்றி தெரியாதவர் யாருமில்லை. அறியாதவர் யாருமில்லை. எல்லாம் அம்பாளின் சித்தம். எல்லாம் அவள் செயல். ஓம் சக்தி. ஓம் சக்தி என மக்கள் அனைவரும் கூறியவாறு சென்றனர்.

மு. ஜுவசினி
முகத்துவாரம் இந்துக்கல்லூரி

பாடசாலைக்களுக்கிடையிலான போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற "கட்டுரை"

## தேவார முதலிகள்

நாம் கடவுளை பலவிதமான வழிகளில் வழிபடுகின்றோம். அவ்வாறு வழிபட்டு அருளைப்பெறுகின்றோம். மாதா பிதா குரு இவர்களுக்கு அடுத்தபடியாகத் தான் இறைவனை வணங்குகிறோம். அவ்வாறு வழிபடும் முறைகளில் தேவாரங்கள் பாடி வழிபட்டு அருள் பெறுவது மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இவ்வாறு மக்கள் குறைகளை நீக்குவதற்கும் தங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காகவும் தேவாரங்களைப் பாடி வழிபட்டவர்களை "தேவார முதலிகள்" என அழைக்கப்படுவர். திருஞான சம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், போன்றோர் அடங்குகின்றனர்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

இவர் சோழவழ நாட்டிலே சீர்காழி எனும் ஊரிலே சிவபாதவிருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் ஆளுடையபிள்ளையார். இவர் மூன்று வயதிலே "தோடுடைய செவியன்" என்ற திருப்பதிகத்தைப் பாடி உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டார். இதன்பொருட்டு இவர் "ஞான சம்பந்தர்" என்றழைக்கப்படலானார். இவர் இறைவனிடம் முத்துக்குடை, முத்துச்சிவிகை, பொற்றாளம், என்பவற்றைப் பெற்றார். இவர் செய் அற்புதங்கள் அளப்பெரியன. அதாவது முயலகன் எனும் நோயை நீக்கியமை, பாண்டியனின் வெப்புநோயை நீக்கியமை. பஞ்சம் போக்கப் படிக்காசு பெற்றமை, திருமறைக்காட்டு ஆலயக் கதவு திறக்கப்பாடியமை என்பன இவற்றுள் சிலவாகும். இவர் பாடிய தேவாரங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளில் அடங்கும். இவருடைய மறு பெயர்கள் ஆளுடைய பிள்ளை, சம்பந்தர், ஞானசம்பந்தர் என்பன சிலவாகும். இவர் முத்தியடைந்த தினம் வைகாசி மாத மூல நட்சத்திரத்தில் ஆகும். இவர் கிரியை நெறியில் நின்று ஒழுகியவர்.

### திருநாவுக்கரசு நாயனார்

இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாரூர் எனும் ஊரிலே புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தார். இவருடைய தமக்கையாரின் பெயர் திலகவதியார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். இவர் சைவத்தை விட்டு சமணசமயத்திற்குச் சென்றதால் "தருமசேனர்" என்றப்பட்டப் பெயரால் அழைக்கப்பட்டார். இதனால் கவலைக்குள்ளாகிய தமக்கையார் இறைவனிடம் முறையிட்டார். இதனால் நாவுக்கரசருக்கு சூலைநோய் ஏற்பட்டது. இந் நோயை திலகவதியார் சிவன் அருளிய திருநீறைக் கொண்டு நீக்கினார். இந்நேரம் அப்பர் "கூற்றாயினவாறு.........." என்றத்திருப்பதிகத்தைப் பாடினார். இது இவருடைய முதலாவது தேவாரமாகும். இவர் இறைவனிடம் பொதிசோறு பெற்றார். இவருக்கு ஏற்பட்ட அற்புதங்கள் பின்வருமாறு:- நீற்றறையில் இட்டும் இறக்காமை, நஞ்சூட்டுவித்தும் இறக்காமை அப்பரை மிதிக்க ஏறிவிட்ட யானை வணங்கிச் சென்றமை, கல்லில் கட்டி கடலில் விட்ட போது கல் தெப்பமாக மிதந்தது. இதன்போது அப்பர் "சொற்றுனை வேதியன்......." என்றத்திருப்பதிகத்தை பாடினார். இத்திட்டங்கள் அனைத்தும் சமணரால் செய்யப்பட்டவையாகும். இவர் பாடிய தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளில் அடங்குகின்றன. இவருடைய மறுபெயர்கள் ஆளுடையஅரசு, அப்பர், தருமசேனர், நாவுக்கரசு போன்றவையாகும். இவர் யாத்திரிகையாகப்

பல புனிதத் தலங்களுக்குச் சென்று உழவாரத்தைக்கொண்டு புல் பூண்டுகளை அகற்றுவதால் இவருடையச் சிறப்புப்பெயரான "உழவாரப்படையாளி" என்றப்பட்டத்தைப் பெற்றார். இவர் சரியை நெறியில் நின்று ஒழுகியவர். இவர் சித்திரை மாதச் சதய நட்சத்திரத்தில் முத்தியடைந்தார்.

**சுந்தரமூர்த்தி நாயனார்.**

இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாதவூரிலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்குப் பலப்பட்டப் பெயர்கள் உள்ளன. இவர் ஒரு நாள் திருமணப்பந்தலில் நிற்கும்போது இவர் சிவபெருமானர் ஆட்கொள்ளப்பட்டார். இவருடைய முதலாவது தேவாரம் "பித்தா பிறைசூடி..." என்றப் பதிகமாகும். இவருக்குப் பெற்றோர் இட்டப் பெயர் "திருவாதவூரர்" என்பதேயாகும். இவர் பாடிய தேவாரங்கள் ஏழாந்திருமுறையில் அடங்கும். இவர் செய்த அற்புதக்களில் ஒன்று முதலை உண்ட பாலகனை உயிர்ப்பித்தமை. இவருடைய மறுபெயர்களாவன ஆலாலசுந்தரர், தம்பிரான், வன்றொன்டர், சுந்தரர் என்பவையாகும். இவர் சிவபெருமானை நினைத்து வாசுகி என்ற பாம்பிடம் இருந்து நஞ்சைத்திரட்டிக்கொண்டுவந்து இறைவனிடம் கொடுத்தார். அப்போது இவருக்கு சிவபெருமானால் ஆலாலசுந்தரர் எனப் பெயர் பெற்றார். இவர் யோக நெறியில் நின்றவர். இவர் ஆடிமாதச் சுவாதி நன்னாளில் முத்தியடைந்தார்.

எனவே நாம் அனைவரும் இவர்களுடைய வழியில் சென்று நற்பிள்ளைகளாக வேண்டும். எங்களுக்காகவே உழைத்த இவர்களுடைய முத்தியடைந்த நாளை ஒற்றி குருபூசை நடாத்துதல் நம் கடனாகும்.

நாம் என்றும் தேவாரமுதலிகளை மறவோம்.

**R. ரிதுஷா**
**புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயம்.**

பாடசாலைகளுக்கிடையிலானன போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற "கட்டுரை"

## சிவனுடன் ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லையடி

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி சற்றேனும் தனது சீரிளமைக் குன்றாது இன்றுவரை நிலைத்திருப்பது தான் நமது சைவசமயம்! தில்லைக் கூத்தனை முழுமுதலாய்க் கொண்டு திகழும் எமது சமயம் தன்னிகரற்றதும், தனித்துவமானதும், தனிச்சிறப்பு வாய்ந்ததுமானதொரு தலைசிறந்த நெறி எனின் அது மிகையல்ல.

அவ்வகையில் எமது முழுமுதற் பரம்பொருளாம் சிவனைக் காட்டிலும் சிறந்ததொரு தெய்வத்தை தேவலோகத்திலும் கூடத் தேடிப்பெற இயலாது இதனைத்தான்,

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
சிவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

என்ற அடிகள் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன.

வெந்நீருள் சூடுபரவியிருப்பது போல கடலுடன் உப்புக்கலந்திருப்பது போல உலகின் ஒவ்வொரு உயிரிலும் ஓரங்கமாய் சிவன் திகழ்கின்றான். அவன் அனைத்துப் பொருளுடனும் அத்துவிதமாயக் கலந்து இருக்கின்றான். எம்மவர் வாழ்வோடு ஒன்றறக்கலந்திருக்கும் சிவன் இயற்கையின் கொடைகளோடு பின்னிப்பிணைந்து அனைத்திலும் நிறைந்து நிற்கின்றான்.

மனிதர்கள் மாயை மறந்து, மோகம்மறந்து உலகியல் வாழ்வில் பற்று நீங்கி புதியவர்களாக உயரிய சிந்தனையுடையவர்களாகப் பரிணமித்து மெய்யான இறையன்புடன் உள்ளார்ந்த உத்வேகத்துடன் அவனை நோக்கும் போது அந்தப் பரம்பொருளின் காட்சி அவர்களுக்கு அருளப்படும்.

ஆதியும், அந்தமும் அற்றவரும், எல்லாம் அறிபவரும் எங்கும் நிறைந்தவரும், எல்லாம் வல்லவருமான எம்பெருமானுக்கு நிகரான தெய்வம் வேறில்லை என்பதற்கு மேற்கூறிய கருத்துக்கள் சான்று பகருகின்றன அல்லவா? ஆமாம்! பகல்வேளைகளில் விண்மீன்கள் எம்விழிக்குத் தெரிவதில்லை. அதற்காக வீண்மீன்களே இல்லை என ஆகிவிடுமா? புவியைச் சூழ்ந்த சூரியஒளி சற்றே கண்ணயரும் போது வீண்மீன்கள் வெளிவருவது போல நிஜத்தின் நிதர்சனமாய் எம்கண்முன்னே கரணம் போட்டுக்கொண்டிருக்கும் மாமலங்கள் நிஜத்தின் நிழல்களால் விழித்தொலையும் போது எல்லாம் வல்ல சிவபெருமான் எம்வாழ்வு சிறக்க முன்மொழிவார். இத்தகைய உயரிய வாழ்வியல் தத்துவத்தை விளக்கி நிற்கும் எம்பெருமானுக்கு ஒப்பான தெய்வம் வேறேதுமுண்டோ?

"கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே"

என்கிறார் சம்பந்தர். அடியார் துயர்நீக்க அமுதொடு கலந்த நஞ்சை உண்ட நல்வேந்தர் அடியவர் வாழ்வு சிறக்க அற்புதம் பல புரிந்த அருளாளர்.

ஒருமுறை இரணியன் இறைவன் எங்கு இருப்பார்? என்று பிரகலாதனை வினவியபோது அணுவை நூறுமடங்காகப் பிரித்துப்பார்த்தால் அதிலொரு பங்கில் இறைவன் இருப்பார் என்றான் பிரகலாதன். அவ்வாறு தூணிலும் துரும்பிலும் கூடத்திகழ்பவரே எம்பெருமான்.

மூன்றே வயதான சம்பந்தருக்கு ஞானப்பாலூட்டியதும், இடபாருடராக காட்சியளித் தமையும், நாவுக்கரசருக்கு நாவால் நவில்ந்து தேவாரம் பாடப்பணித்தமையும், கிழப்பிராமணராக வந்து சுந்தரர்பால் வழக்குத் தொடுத்தாட்கொண்டமையும், மாணிக்கவாசகர் பலசோதனைகளின் மத்தியிலும் சாதனைகள் பல புரிய குருத்தமர நிழலில் போதனை வழங்கியமைம் மாம்பழமொன்றின் மூலம் காரைக்கால் அம்மையாரின் புகழை மாண்புடன் விளக்கியமையும், சேந்தனாரை நாவால் சரமழை பொழியவைத்தமையும், கண்தந்த கண்ணப்பனை புகழின் உச்சத்தில் புகழின் உச்சத்தில் புகலிடம் கொள்ளச்செய்தமையும், சமணனாக வாழ்ந்த கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக்கி சைவம் தழைத்தோங்க வழிசமைத்தமையும், செம்மணைச் செல்விக்காக பிட்டுக்காய் மண்சுமைந்தமையும் சிவனின் திருவிளையாடல்களேயன்றி வேறென்ன? இத்தகைய சிறப்புக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட முழுமுதற்தெய்வத்தை வேறெந்த சமயமும் எடுத்துக்காட்டவில்லை.

“ அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”

என ஏட்டிலே தீட்டி நாட்டிலே விட்டுச்சென்றார் திருமூலர். சிவனை அன்பே வடிவானவராக சித்தரிக்கின்றது திருமந்திரம். அதனால் தானோ என்னவோ எமது சமயத்து இறைவனை தாயுமானவர் என்றும், கருணாமூர்த்தி என்றும் தயாளன் என்றும் சிறப்பிக்கின்றனர் போலும். இவ்வாறு அன்பின் கூற்றாகத் திகழும் தெய்வத்தை நாம் எங்கு தேடினும் பெறஇயலாது என்பது சிறிதேனும் ஐயமில்லை!

ஆயினும் இன்றைய இயந்திர உலகில் சூறாவளியாய் சுழன்றுகொண்டிருக்கும் இளைஞர்கள் மத்தியில் சைவம் அஸ்தமித்துக்கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமே! எனவே இவற்றையெல்லாம் வெறும் மேடைப்பேச்சாகக் கருதாது கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கும் சைவத்திற்கு உயிர் கொடுக்க சைவம் தந்த முதல்வனாம் சிவனைப் போற்றிப்புகழ்ந்து, பணிசெய்து அவன்புகழ்பரவ அரும்பாடுபட்டு நாடும் ஏடும் போற்றுமளவு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக!

“பத்தாகிய தொண்டர்தொழ பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சத்தானே”

**J.பிரியலக்ஷ்மி**
**இராமநாதன் இந்துமகளீர் கல்லூரி**

பாடசாலைக்களுக்கிடையிலான போட்டிகளில் மேற்பிரிவில்
முதலிடம் பெற்ற "கட்டுரை"

## சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்

மாக்கள் தன்மையில் இருந்து நல்ல அறப்பண்புகளை கொண்ட மக்கள் தன்மையில் அனைவரையும் ஒன்றிணைப்பதே சமயமாகும். "இறைவன் ஒருவனே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற திட்டமான நம்பிக்கையை கொண்டு பரம்பொருள் ஒன்றே என அதனை பல வழிகளிலும் பல நிலைகளிலும் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்து சமயத்தை பொறுத்தவரையில் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் என ஆறுவகைப்படுகின்றது. இவை முறையே சிவன், விஷ்ணு, சக்தி, முருகன், கணபதி, இந்திரன் ஆகிய தெய்வங்களை முழுமுதற் கடவுளாக கொண்டு அவர்களை போற்றி வணங்கி வருகின்றது.

சிவனை முதல்வனாகக் கொண்டு வழிபட்டு வரும் சமயமே சைவசமயமாகும். சைவசமயம் காலத்தால் முற்பட்ட ஒன்று. இது இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகிய நால்வேதங்களின் பொருளாக உணர்த்தி நிற்கின்றது. சிவனை முழுமுதற் பொருளாக கொண்ட சைவம் முழுமையானது, முதன்மையானது.

"அன்பும் சிவனும் இரண்டென்பார் அறிவிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.
அன்பே சிவமானதை யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்ற திருமூலர் எழுதிய திருமந்திர பாடல்படி அன்பு தான் சிவன் அதில் எவ்வித முரண்பாடுகளும் இருப்பதில்லை. "கடவுளை நம்பினார் கைவிடப்படார்" என்பதை "சிவனை நம்பினார் கைவிடப்படார்" என்று கூறினால் கூட மிகையாகாது. சிவபெருமான் ஆன்மாக்களை ஆட்கொண்டார்.

சிவபெருமான் தம் பக்தர்களை ஆட்கொள்வார் என்பதற்கு அவர் எடுத்தருளிய மூர்த்தங்களும் சமயக்குரவர்களையும் நாம் உதாரணப்படுத்தலாம்.

அறுபத்துமூன்று சமயக்குரவர்களின் தலைமையான சமயக்குரவர் நால்வரின் வரலாற்றை நாம் கூறலாம். அதனை சிறப்பாக நாம் காணவேண்டுமேயாயின் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தை புரட்டினாலே அனைத்து நாயன்மார்களின் வாழிவோடும் நாம் வாழும் உணர்வு எமக்குள்ளே பின்னிப்பிணைந்துவிடும்.

"யாம் இரப்பவை யல்ல
பொன்னும் பொருளும் போகமுமே யாகும் நின்பால்
அன்பும் அருளும் அறனும் என்றும்
உருள் இணர் கடம்பின் ஒலி தாராயே.........."

என்ற பரிப்பாடல் வரிகளுக்கிணங்க அன்பும் அருளும் அறனும் என்று தம் வாழ்வை சைவத்தின் பால் ஈட்டிச் சென்ற சமயக்குரவர் நால்வரும் இறைவனால் ஆளப்பட்ட விதத்தினை நோக்குவோமாக.

சரியை நெறிப்படி சென்று "தொண்டுக்கு அப்பர்" என்று சொல்லக்கூடியவரும் 81 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சூலைநோயால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு சமணர்களிடம் அவர் பெற்ற துன்பங்கள் எல்லாம் அவரை வாட்டாது அவருக்கு பாதுகாப்பாய் இருந்தது. "நமசிவாய" என்ற திருவைந்தெழுத்தே ஆகும்.

அதில் இருந்து அப்பர் தம் வாழ்வை இறை பணிக்காகவே செலவிட்டார். அதனை தெளிவுபடுத்த அவர் அருளிய தேவாரம் பின்வருமாறு

"நங்கடம்பனை பெற்றவள் பங்கினல்
தெங்கடம்பனை திருக்கரக் கோயிலான்
தங்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"

கிரியை நெறிப்படி சென்று 16 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து சிறுவயதிலேயே இறைவனை கண்டு உமையம்மையாரிடம் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் "தோடுடைய செவியன்...." என்ற தேவாரபாடலை முதல் முதலில் இறைவனுக்கு பாடியருளினார். பின்னர் இறைவனால் முத்து சிவிகை, பொற்றாளம் பெற்றுக்கொண்டார்

குறைந்த காலம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் அனைவராலும் இசையுடன் கூடிய தேவாரப்பதிகங்களை பாடி கவரப்பட்டவர். பின் அவரது திருமணத்தின்போதே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இவர் இறுதியில் பாடிய தேவாரம் "காதலாகி கசிந்து கண்ணீர்......" என்ற தேவாரமே ஆகும்.

"பித்தா" என்று இறைவனுக்கே வன்சொல் கூறிய வன்தொண்டராகிய சுந்தரமூர்த்திநாயனார். அவர் இறைவனுடன் கைலாய வாழ்வை மேற்கொள்ளும்போது பெண்கள் மீது கொண்ட பற்றினால் பூலோகத்தில் பிறந்து பரவையார், சங்கிலியார் ஆகிய இரு மனைவியரையும் மணந்தார்.

இவரது திருமணத்தின்போது "இறைவன் யார்" என்பதையும் அவரது முற்பிறப்பையும் உணரவைத்தார். இவர் யோக நெறியை மேற்கொண்டு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.

"இறைவனையன்று யமனுக்கும் நான் அடிமை இல்லை" என்று குருவினால் ஆன்ம ஈடேற்றம் அடைந்து ஞான நெறியினால் இறைவனை கண்டு மகிழ்ந்த மாணிக்கவாசகர் நால்வருள் ஒருவர்.

இவர் தன் ஞானத்தினால் இறைபொருளைதேட முற்பட்டு அதில்வெற்றியும் கண்டார். சிவபெருமானையே நினைத்து தம் வாழ்நாளை அச்சிவனுக்கே என அர்ப்பணித்தார்.

இவ்வாறு இறைபொருளை நோக்கிச் சென்று இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயன்மார்களின் வரலாற்றின்மூலம் தெரிகிறது மூலம் சிவனே அவனே தலைவன் என்று

"சிவ சிவ " என்ற இறை மந்திரத்தையே தம் தாரக மந்திரமாகக் கொண்டதனால் இறைவன்பால் ஈர்க்கப்பட்டு இறைவனடிகளில் சரணமெய்திய இவ் நால்வரால் "சிவ சிவ என்றிட தீவினை மாளும்" என்ற அடிகளுக்கு பொருள் உணர்த்தப்படுகிறது.

நாமும் அற வழியில் சென்று இறைவனை வழிபட்டால் எம்மையும் தீவினை அண்டாது.

"நமச்சி வாய வாழ்க
நாதன் தாழ் வாழ்க!"

**சு. அகிலாஅருந்ததி**
**புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயம்.**

# நகுலேஸ்வரத்தின் பெருமை

*கீரி மாமலை வாரிதி யாடியே*
*கிரீச னாநகு லேசனை நாடியே*
*சேரு மன்பொடு சிந்தனை செய்துமேற்*
*றிசைகொ ளுக்கிர சோழரா சன்மகள்*
*மாரு தப்பிர வல்லியென் பேரினாள்*
*வாவு வெம்பரி மாமுக மோடு நோய்*
*தீர நீங்கின ளித்தலத் தேயெனிற்*
*செப்பி லங்கையி லொப்பிதற் கில்லையே*

புராதனகாலத்திலே திருத்தம்பலேசுரம் எனவும், நகுலமுனிவர் அருள்பெற்றபின் நகுலேசுவரம் எனவும் அழைக்கப்படும் கீரிமலைச் சிவன் கோயில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கின்றது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் விஷேடம் பெற்றது: இட்ட சித்திகளைக் கொடுப்பது: மனோலயத்துக்கும், வியாதி நீக்கம் முதலியவைகளுக்கும் ஏற்றது.

நகுலேச தீர்த்தமான நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த சலமும் வடக்கிலுள்ள உப்புச் சலமும் கலந்து கிழக்கு நோக்கிய சிவரூபமுஞ் சத்திரூபமுமாயிருக்கின்ற இயல்பினாலே திவ்விய தீர்த்தமாகும். இது கங்கா சமுத்திர சங்கமமென்றும், கண்டகி தீர்த்தமென்றும் பெயர் பெறும். இத்தீர்த்தத்திலே காலந்தோறும் அளவில்லாத அன்பர்கள் விதிப்படி ஸ்நானஞ் செய்து பயன் பெற்று வருகிறார்கள்.

முன்னொரு காலத்திலே மேருமலையின் இடப்பாகத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினாலே துர்த்தரன் என்னும் வேடம் கீரிமுகம் பெற்றான். உடனே வேடன் நடுநடுங்கி அச்சாபத்துக்கு விமோசனம் கொடுக்கும்படி வேண்டினான். முனிவர் கருணை கொண்டு "வேடனே, நீ என் தரிசனத்தாற் சுத்தனானாய். வேதாரணியத்திற்குத் தெற்கிலுள்ள கடலிலே இலங்கையென்றொரு தீவு உளது. அதன் வடக்கே ஓர் உயர்ந்த மலையிருக்கிறது. அங்கு சென்று கருமயோகஞ் செய்தால் கீரிமுகம் மாறி மோட்சமும் பெறுவாய்" என்று கூறி யோக மார்க்கங்களை உபதேசித்து ஆற்றுப்படுத்தி அனுப்பினார்.

கீரிமுகம் பெற்ற அவ்வேடன் இங்கு வந்து கங்கா தீர்த்தத்தில் நீராடி மலையிலே ஒரு சாரலிலிருந்து கருமயோகஞ் செய்வானாயினான். பல்லாண்டு காலம் தீர்த்தஸ்நானம், ஈசுரவழிபாடு, செபம், முதலியன செய்துகொண்டிருத்தலைத் திருவுளங்கொண்ட சிவபெருமான் உமாதேவியாரோடும் முருகப்பிரானோடுங் கூடி இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினார். அப்போது அவ் வேடனாகிய நகுலமுனிவர் சோமஸ்கந்த மூர்த்தியைத் தோத்திரஞ்செய்து வணங்கினார். சிவபெருமான் அறிஞனே, நீ இப்பொழுது அழகிய முகம்பெறுவாய். நீ தவஞ் செய்த இம் மலை நகுலமலையென்றும், உனக்கு அருள் செய்த எம் நாமம் நகுலேசுரர் என்றும், தேவி நாமம் நகுலாம்பிகையென்றும், தீர்த்தம் நகுலேச தீர்த்தமென்றும் வழங்குக என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். நகுல முனிவர் பின்னும் பலகாலம் தவஞ் செய்து மோட்சமடைந்தார்.

திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்கியென்பவள் குதிரைமுகமுடைய கின்னரப் பெண்ணொருத்தியின் சாபத்தினாலே குதிரை முகமுடைய மாருதப்புரவீகவல்லியென்னும் பெண்ணைப் பெற்றாள். அப்பெண் குன்ம நோயும் உடையவளாய் இருந்தாள். வெட்கத்தினால் வளைந்த கழுத்துடையவளாய்ப் பல தீர்த்தங்களாடி இறைவனைத் துதித்து வந்தாள். நகுலேசுவரப் பெருமான் அவளது கனவிலே சந்நியாசியாய்த்தோன்றி "மாரதப் புரவீகவல்லியே, யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள நகுலேச தீர்த்தம் கங்கையிலும் மேன்மையுடையது: அத் தீர்த்தத்திலே முழுகிச் சுகமடைவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவள் அவ்வாறே அத்தீர்த்தத்திலாடிக் குதிரை முகமுங் குன்மநோயும் மாறப்பெற்றாள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, இராமர், சுகங்கிதன், நளன், அருச்சுனன் முதலிய பலர் நகுலேசுரத்துக்கு வந்து, நகுலேசுர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, நகுலாம்பிகாசமேத நகுலேசுவரப் பெருமானைப் பக்தி சிரத்தையோடு, இட்ட சித்திகளைப் பெற்று உய்தார்கள்.

*(நன்றி : ஆத்மஜோதி உலக இந்து மாநாட்டு சிறப்பு மலர் 1982)*

## கோணேஸ்வரத்தின் வன்மை

உலகப் பிரசித்திபெற்ற இந்த உருவத் திருமேனிகளில் சிவன் (கோணேசர்) சுகாசன மூர்த்தியாக அபயம் வரதங்களோடு சிம்முத்திரை காட்டி மானும், மழுவும் தாங்கிய சதுர்ப்புஜங்களை உடையவராக வலது திருவடியைத் தொங்கவிட்டு பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறார். பார்வதி (மாதுமையம்பாள்) சுகாசன மூர்த்தமாக லோலஹஸ்த முத்திரை காட்டி மறுகரத்தில் நீலோற்பல மலர்தாங்கிய துவிபுஜங்களோடு பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இத்தகைய அமைப்பை வேறு எங்குமே காண்பதரிது. இந்தியாவில் நெல்லூரிலும், மேட்டுரிலும் இந்த அமைப்போடுள்ள திருவுருவங்கள் காணப்பட்டபோதிலும் அவைகள் ஒரே பீடத்தில் இருப்பதையும், அம்பாள் இடக் கரத்தை ஆசனத்தில் ஊன்றியபடி இருப்பதையும் காணலாம். கோணேஸ்வரதிலுள்ள திருவுருவங்கள் தனித்தனிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றார்கள்.

சிவஸ்தலங்கள் எல்லாவற்றிலும் சோமஸ்கந்த மூர்த்தம் இருக்கும். அந்த மூர்த்தங்களை அவ்வத் தலத்து இறைவன் பெயரால் சுட்டி வழிபடுவார்கள். அவ்வாறே கோணேஸ்வரத்திலுள்ள சோமஸ்கந்த மூர்த்தியை மாதுமையம்பாள் சமேத கோணேசர் என்றே வழிபடுவர். இங்கு எழுந்தருளியுள்ள மாதுமையம்பாள் சமேத கோணேசருக்கு மற்றும் உரு சிறப்புண்டு. சிவ ஷேத்திரங்களுக்குத் தேவார முதலிகள் மூவரும் திருமுறைகள் பாடியிருக்கிறார்களல்லவா? அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்களில் திருகோணமலைத் தேவாரத்தில் மாத்திரம்தான் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் "கோணமாமலை அமர்ந்தாரே" என்று பாடப்பட்டிருக்கின்றது. உத்தரகயிலையிலும் இறைவன் அமர்ந்திருப்பது போலத் தெட்சணகயிலையழலும் இறைவன் அமர்ந்துள்ளாரென்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். உத்தரகயிலையின் சிகரங்களிலொன்று தெட்சணகயிலாயமாகிய திருக்கோணமலை என்னும் புராண வரலாற்றையும், (செவ்வந்திப்புராணம்) திருமூலநாயனார் வட கயிலையிலும், தென்கயிலையிலும் (இலங்கை) சாஸ்திர ரீதியாக இணைத்துக் காட்டிய உண்மையினையும் ஞானசம்பந்தரின் வாக்கு உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய கோணேஸ்வரத்தின் இயற்கை அமைப்பையும், வரலாறுகளையும் தெட்சணகயிலாய மகாத்மியம், தெட்சணகயிலாய புராணம், திருக்கோணாசல புராணம், திருகோணமலை அந்தாதி முதலிய பழைய நூல்கள் விதந்து கூறுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞர்னசம்பந்தர் பாடியருளிய தேவாரத்தில் "கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும் நித்திலம் சுமந்து குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை" என்றும், விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின் குருத்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை" என்றும் "துன்றுமொண் பௌவம் மௌவலும் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக் குன்றுமொண் கானல் வாசம் வந் துலவும் கோணமாமலை" என்று, "கரைகெழுசந்தும் காரகிற் பிளவும் அளப்பரும் கனமணி வரன்றிக் குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலையென்றும் தெளித்தும் முன்னரற்றும் செழுங்கடற் தரளம் செம்பொன்னும் இப்பியும் சுமந்து கொழித்து வன்திரைகள் கடையிடைச் சேர்க்கும் கோணமாமலை" என்றும் கோணமாமலையின் இயற்கை எழிலை விதந்து கூறுகின்றார்.

அன்றியும் இறைவனானவர் "கடிதெனவந்த கரிதனைஉரித்து அவ்வுரி மேனிமேல் போர்த்ததையும்", "மேரு வெஞ்சிலையாய்க் குனித்ததையும்", "மதனனைப் பொடியாய் விழித்ததையும்", " பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி தன்னுயிர்மேல் வரும் கூற்றைத் திரிந்திடா வண்ணம் உதைத்ததையும்", "எடுத்தவன், தருக்கை விரலால் இழித்ததையும்", "வேள்வி தடுத்ததையும்", "வெண்தலை ஏந்தி அகந்தொறும் பலியுடன் புக்கதையும்", "பெருங்கடல் வண்ணன் பிரமன் இருவரும் அறியா வண்ணம் ஒள்ளெரியாய் உயர்ந்ததையும்", "திருஞானசம்பந்தர் கோணேசப் பெருமான் அட்டவீரட்ட மூர்த்தியாய் இங்கு எழுந்தருளியிருப்பதைக் குறிக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் இயற்கை அழகும், கோணேசப் பெருமானின் திருவருட் செயல்களும் திருக்கயிலாயத்தின் இயற்கை எழிலுக்கும், கைலாசபதியின் திருவருட் செயலுக்கும் ஒப்பாக இருந்த காரணத்தால் பண்டைக் காலத்தில் வட இந்திய யாத்திரிகர்கள் இந்தத் தெட்சணகயிலாயத்தை நோக்கி யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுப் போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டி.குவைறோஸ் பாதிரியாரவர்கள், "பூரி ஜெகந்நாத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் போய் தரிசனம் செய்துவரும் யாத்திரிகளிலும் பார்க்க மிக அதிகமானோர் இவ்வாலயத்தை தரிசித்து வருகின்றார்கள". என்று தமது நூலில் எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது.

வடநாட்டு யாத்திரிகளின் கவனத்தைக் கவரக் காரணமாயிருந்ததென்ன? திருக்கோணேசர் ஆலயம் உலகிலுள்ள வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் பழைமையானதொன்று எனவும், திருக்கோணமலை நாகரீகமும் மொகஞ:சதாரோ, ஹரப்பா நாகரீகமும் ஒரே காலத்தன எனவும், கடல் கோள்களால் அழிந்துபோன லெமோறியாக் கண்டத்தின் எஞ்சிய தரைப்பகுதிகளில் இலங்கையுமொன்று எனவும் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். திராவிட நாகரீகத்தின் பிறப்பிடமான லெமோறியாக் கண்டம் கடலுள் மூழ்குவதற்கு முன் திராவிட மக்களின் சமயக் கோட்பாடுகள் சிறந்து விளங்கிய காலத்தில் கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தின் பல பாகங்களிலும் சிவஷேத்திரங்கள் பல இருந்தன. இந்தச் ஷேத்திரங்களுக்கு இந்தியாவின் வடக்கேயிருக்கும் ஆஸ்திகப் பெருமக்கள் யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். லெமோறியா கடலுள் மூழ்கிய பின்னும் அந்தப் பாரம்பரியப் பழக்க வழக்கங்களை அவர்கள் கைவிடவில்லை. இதனால்தான் இன்றும் எண்ணற்ற வட இந்திய யாத்திரிகர்கள் வடக்கேயிருந்து இராமேஸ்வரத்துக்குத் தரிசனம் செய்ய வந்துகொண்டிருக்கிறார்கள். காசி, பூரி, காஷ்மீர் முதலிய இடங்களிலுள்ள வட இந்திய யாத்திரிகர்கள் பத்திரிநாத், கேதாரநாத், அமரநாத், கயிலை முதலிய சிவஸ்தலங்களுக்குப் போய் வழிபாடு செய்து அங்கிருந்து கங்கா, ஜமுனா முதலிய புனித தீர்த்தத்தை எடுத்து வந்து இராமேஸ்வரத்தில் இராமலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து, இராமேஸ்வரத்திலிருந்து புனித மண்ணை எடுத்துச் சென்று கேதாரநாத், பத்திரிநாத், பூரி, காசி, முதலான இடங்களிலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு மண்ணினால் அபிஷேகம் செய்யும் வழக்கம் இன்று நடைபெற்றுவருகின்றது. இந்த வழக்கம் பண்டைக்காலத்தில் உத்தரகயிலைக்கும் தெட்சணகயிலைக்குமிடையில் வட இந்தியர் ஆன்ம யாத்திரை செய்து வந்த வழக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கலாம்.

*"நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது."*

*(திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடான திருக்கோணேஸ்வரர் - "தொன்மையும் வன்மையும்" என்ற நூலில் இருந்து ஓர் அத்தியாயம்.)*

**தொகுப்பு : ஜே.அருள்பிரகாஷ்**
வணிகப்பிரிவு - 2008 / 2009

## நன்றி நவிலல்

* இளையவர்களாகிய எம் அழைப்பை மதித்து வருகைதந்த பிரதம விருந்தினர் திரு.ரமேஸ் பாபுஜீ (தமிழ் நாடு) அவர்களுக்கும்

* கற்பக வல்லியின் பொற்பாதங்களைப்போற்றி விழா எடுக்க அனுமதியும் ஆதரவும் வழங்கிய எமது கல்லூரிஅதிபர் H.A.உபாலி குணசேகர அவர்களு க்கும்

* எமது கல்லூரியின் அதிபர், துணை அதிபர் அவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும்,

* தந்தையாக நின்று நாம் மனம் தளர்ந்த போதெல்லாம் எம்மைத் தட்டியெழுப்பிய எமது மன்றப் பொறுப்பாசிரியர் திரு.S.பாலேந்திரன் அவர்களுக்கும் எமது இரு கரங்களைப்போல் எமக்கு உதவிஅளித்த உதவிப் பொறுப்பாசிரியை திருமதி L.தவகுமார் அவர்களுக்கும் மற்றும் திருமதி. K. பத்மநாபன், திரு.S. கிருபாகரன், திரு.V.செல்வரஞ்சன், திரு.B. கிருபாகரன் அவர்களுக்கும்.

* ஆசிச் செய்தியையும், ஆக்கங்களையும் தந்துதவியவர்களுக்கும், எமது பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் சமயத்திறன் காண்போட்டிகளில் கலந்து கொண்ட ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் நடுவர்களுக்கும்

* எமது விளம்பரதாரர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும், எமது அழைப்பிதழ்கள் மற்றும் சான்றிதழ்களை அச்சிட உதவிய Hare Printers தாபனத்தாருக்கும்,

* வெற்றிச் சின்னங்களிற்கு அனுசரணை வழங்கிய Vista Advertising & Business Consultants (pvt) Ltd நிறுவனத்தாருக்கும்,

* நிகழ்வின் ஒளிப்பதிகளுக்கும் கணிணி வடிவமைப்புக்கும் உதவிய "WedsCom" Digital Video நிறுவனத்தாரிற்கும்

* ஒலி, ஒளி அமைத்துத்தந்த நிறுவனத்திற்கும்,

* மற்றும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் விழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்த அனைவருக்கும்

**"எமது மன்ற உறுப்பினர்களின் பணிவான நன்றிகள்"**



- செயற்குழு -
**2008 / 2009**

## Thanking you

- To our chief guest Mr.Ramesh Babuji (Tamil nadu India) for his participation despite his busy schedule,
- Our principal Mr.H.A.Upali Gunasekara for his presence and kind co-operation this event,
- Our Principal, Vice Principal, the Teacher in – charge, Mr.S.Balenthiran, Mrs.L. Thavakumar and our teachers Mrs.K.Pathmanaban, Mr.S.Kirubakaran, Mr.V .Selvaranjan, Mr.B.Kirubakaran and the members of the staff for their guidance fullest support and encouragement in making this day a success,
- The judges & participants of Inter - grade competitions and those who contribute articles to this souvenir
- Teachers in – charge & participant of other schools who participated in the annual Inter – School competitions.
- Our well-wishers, advertisers and sponsors who contribute banners and advertisements to "SivaShakthi 2008".
- "HARE PRINTERS" for having printed the requirements,
- Vista Advertising & Business Company (Pvt) Ltd, for Sponsoring trophies ,
- Weds com Digital Video for Video records and excellent designing of "SIVASHAKTHI 2008"
- for providing excellent light and sound system,
- All parents who have granted their support,
- All who have been here to grace this occasion,

**Our sincere thanks to all of you**

**Organizing Committee - 2008/2009**
**Hindu Students Union**



விடைபெறுகின்றோம்

நீங்காத நினைவுகளுடன்



B.Niruban

D.Thileepan



*With the best compliment From*

# VIBRATIONS

***Everything's real***

## Duty Free


**Shop # 21D, Departure lounge, Airport**
**Colombo, Srilanka**

**E-Mail : vibrations @ maharaja.lk**

**Web : http //www.me.lk**

**Vibrations_bia@sltnet.lk**

**Tel: 0094 -112251016**




Designed by "Studio Jeevani" Tel: 077 3080795 ---Printed by:-"Hare Printers"